1585

KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு ஏப்ரல் மீ 4 உ [No. 14

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 209
2. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 211
3. உருபு மயக்கம் (சிறுகதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 213
4. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 215
5. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's "Othello" 216
6. கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினள்
K. நாராயணரெட்டிகாரு 218
7. சூரியன் (சூரிய குடும்பம்.)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 221
8. மலர்வனம்— நன்றியோ நங்காயிது.
"மதுகரம்" 223
9. வர்த்தமானம் 224

## கலாநிலயம்

### வழியும் வகையும் 3.

களத்தினுட் சென்று பகைவன்வேல் மருமத்துட் பாயு மாய்வதன்றியும் வீரர் தம் ஆவியைத் தாமே அவியெனச்சொரிதற்கொத்த அவியாத உள்ளத்தவராய் இருக்கவல்ல இயற்கையையும் இதன்முன் நோக்கினோம். தம்முடைய தலையைத் தாமே அரிவராம், சிரம் அரிந்தபின் அவ்வுடலம் கும்பிட்டு நிற்குமாம், களிப்புக் கைம்மிக விளையாடுமாம், சிரத்தின் குஞ்சியைக் கோதிமுடிக்குமாம், குருதியால் திலதம் இடுமாம்; கழுத்தில் நில்லாதபோதும் உடலால் உபசாரம் செய்யப்பெற்ற இந்தச்சிரம் தானேதேவியைத் துதிக்கலாகுமாம்! இதுகவிதையாதலின் கட்டுக்கதையின் பொய்யுரையன்று. இதனை நம்புவதற்குரியபாக்கியம் வேண்டுமாயின், செய்தவங்கள் சிற்சில செய்திருத்தலும் வேண்டும். இதனை நம்ப இயலவில்லையாயின் இனிஇப்பேருலகில் நம்புதற்குரியதொன்று வேறு யாது உளது? அந்நிகழ்ச்சிகள் எவ்வகையனவேயாயினும், அவைகளை இயக்கிய வீரமோ நம்பப்படாமல் ஒழியத்தகுந்ததன்று. நிகழ்ச்சியின் உண்மையும்அன்மையும் இடத்தைச் சார்ந்தன. மற்று, நிகழ்ச்சிக்குப் பின்நிற்கும் நினைவோ நிரந்தரமான காலத்தின் தொடர்பினால் நிலைத்திருக்கும் ஓர் நிச்சயம் வாய்ந்தது. தம்முயிரைச் சிரமோடு தாமேஉவந்தீயும் இந்தச்சேவகம் காலம் என்னும் படத்தில் தீட்டப்பெறுகின்ற மெய்ம்மையின், மிகமிக வழகியதோர் கவிதைச் சித்திரமாம். ஆகையாற்றான் இத்தகைய சித்திரங்களில் நமது சிந்தனை செல்லுங்கால் நம்மையே அறியாமல் நாமும் அதனுள் ஓர் இடந்தேடி ஒதுங்கிநிற்க விழைகின்றோம். ஒரு பொருளை அல்லது ஒருவிஷயத்தை, அது நிற்கின்ற இடத்தைச் சார்ந்து நோக்குங்கால் தென்படுகின்ற தோற்றமானது, அதனையே காலத்துடன் சார்த்திக் காண்கிற காட்சியினின்று முற்றிலும் வேறாயிருக்கும். முன்னது பொய், பின்னது மெய்; காலத்தைச் சார்ந்த காட்சியின் நிழலே இடத்தைச் சார்ந்ததோற்றமாக அமைகின்றதென்னலாம். கழுத்தின்மேல் தலை நிற்கும்வரையிலே இருந்து உடலை இயக்கவல்லதாம் என்று மதிக்கின்றஉயிரானதுஇடத்தைச்சார்ந்து மதிக்கப்படுகின்ற பொய்யுயிர். வகை தெரிந்து சாத்துணிகின்றவீரமே அவ்வுயிரின் உயிர் நிலை எனத்தகும் என்று முன்னர்க் கூறினோம். அவ்வுயிர்நிலையாகிய வீரமோ, ஆதியும் நடுவும் அந்தமுமற்ற காலத்தை அளாவிநின்று தானும் ஆதியந்த நடுவற்றதாகி, இடத்தையேநிறைக்கவல்ல உடல்சிதைந்த பின்னும், உணங்காமல் இயங்கவல்லதாகின்றது. ஆதலின் உடலின் உயிர் ஒய்ந்ததென்று உரைக்கவேண்டிய நிலையிலும் அவ்வுயிரின் உயிர் இயங்கும் மெய்ம்மையை, காலத்திலேயே ஊன்றியுள கவிதையானது காட்சிகொண்டு அவ்விணையரிய தாழிசைகளைக்கலிங்கத்துப்பரணியில் பாடியுள்ளதென்பதை உணர்தல் வேண்டும். இன்று, மேனாட்டுக் கணிதநூல் மெய்ம்மையின் சிகரத்திலேறி இப்பிரபஞ்சத் தோற்றத்தை

நமக்குமொழிபெயர்த்துத்தருபவராய் உலகனைத்தும் ஒருவராய்க் கொண்டாடும் ஈன்ஸ்டின்(Einstein) என்பவர் எய்தியுள்ள முடிவின் தத்துவம்இத்தகைய சிந்தனைகளைக் கவிதையின் மெய்ம்மையைப்பற்றியும் எழுப்பித் தருவது இயற்கையே யாம்.

நன்று: வீரர்தம் செய்கைத்திறமும் அன்னதனை மெய்ம்மையாக்கும் கவிதைத் திறமும் இன்னதாக, அவர்தாம் உயிரை உகுப்பவர்போல் அவ் வுயிரின் உயிர் நிலையை ஈட்டிக்கொள்ளப் புக்கதன் நோக்கத்தைச்சிறிது இங்கு உணர்தல்வேண்டும். ஐயங்கொண்டார் அதனை வெளிப்படையாகக்கூறவில்லை. ஐயனரிதனார்,வீரர்தம்செஞ்சோற்றுக்கடன்செலுத்திச் சுவர்க்கத்தைத் தமக்கு இடமாக்கிக்கொண்டனர் என்பதும்அவ்வீரத்தின்தகைமைமுழுவதையுந்தெரிவித்ததாகாது. பௌத்தநெறித் துறவியாம் இளங்கோவடிகள், புகலரிய பெருமைவாய்ந்த சிலப்பதிகாரத்தின்கண், கருத்தெல்லாம் கவரும்படி காதற்சுவையைப் பாடிய கானல்வரிக் கீடாக, வீரச் சுவையால் விளையும் இனிமையை, இந்திரவிழவூரெடுத்த காதையில், புகழ்மிக்க புகாரின் செய்திகளைச் செப்பிவருங்கால், கீழ்வரும் அடிகளில் கனிவித்துத் தந்திருக்கின்றார்:-

> சூர்த்துக் கடைசிவந்த சுடுநோக்குக் கருந்தலை
> வெற்றி வேந்தன் கொற்றங் கொள்கென
> நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்
> குயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து
> மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி

[பார்ப்பவரை அச்சமுறுத்தும்படி கடைசிவந்துள்ள கொள்ளிக்கட்டை போன்ற பார்வையையுடைய தம் பசுந் தலையானது, வெற்றிவாய்ந்த வேந்தன் கொற்றம் பெறுக என்று பேசும்படி, அரிந்து நல்ல பலிபீடத்தில் நலமுற வைத்து, அக்குறையுடல்கள் தமக்கு வாய் இல்லாமையால், தத்தம் தோள்களிற் கட்டியிருக்கின்ற, மயிரோடு கூடிய தோல் வாய்ந்த கண்ணுடைய முரசுகளை அடித்து அந்த ஒலியினால்,"உயிர்க்கடன் தந்தோம்,சிறப்பான இப்பலியை உண்க" என்று பலியூட்டி(நின்றார்)]

ஆதலான், வெற்றி வேந்தன் கொற்றங் கொள்ளுதற்கு, வீரராயினோர் தம் உயிரை அங்ஙனம் பலியூட்டினர் என்னுந் தன்மை தெரியவருகின்றது. வேந்தனது நன்மையை விழையும்இது, உலகத்தின் பொது நன்மையைப் போற்றும் வகையேயன்றி வேறன்று. புறநானூற்றில்,

> நெல்லு முயி ரன்றே நீரு முயி ரன்றே
> மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
> அதனால் யா னுயி ரென்ப தறிகை
> வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

[அகன்ற இடத்தையுடைய இவ்வுலகம் அரசனையே தனக்கு உயிராக உடையது. ஆகையால், இவ்வுலகத்தோருக்கு நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று, தானே உயிர் என்பதனை அறிந்துகொள்வது வேலாயுதம்ஏந்திய சிறந்த படையையுடைய அரசனுக்கு முறைமையாம்.]

என்று மோசிகீரனார் பாடியிருப்பது இதனை விளக்குகின்றது. மன்னனே உலகத்திற்கு உயிர்போன்று அமைகின்றானாதலின் அவன் அதனை அறிந்து அதற்குத் தக்கபடி சீலமும் கொற்றமும் உடையனாய் அமைதல் வேண்டுவது அவன் கடனும் என்று கூறினார் மோசிகீரனார்.அவ்வரசனாகிய உயிர் ஓங்கும்படி, வீரர் தம்முடைய உயிரைப் பலியூட்டி உலகத்தின் நன்மைக்கு உதவிசெய்கின்றனரென்று இளங்கோவடிகளைக்கொண்டு நாம் உணர்தல் வேண்டும். இவ்வாறு தம்மைப் பலியாக்கிக் கொள்ளுவதால் அரசனது கொற்றம் எங்ஙனம் கொள்ளப்பட்டதாகும் என்னக் கேட்டு, மூடபக்தியாம் அது என்பதனைய சிறிய விடைகளைக் கொணர்ந்து சேர்த்துக் கலங்க வேண்டா. இவ்வீரமுடன் விருப்பமும் காலத்தைச் சார்ந்த செய்திகளாய் நிரந்தரம் நிலைநிற்கின்ற கவிதையின் மெய்ம்மைகள் ஆவதை முன்னங்குஉரைத்தபடி மீண்டும் இங்கு நினைவில் நிறுத்திக்கொள்ளுதல் நலம்.

வீரரின் திறம் இன்னவாறு விளங்கப் பெற்றபின், எல்லாத் தேயத்திலும் எல்லாக்காலத்திலும் இருந்த உத்தம வித்தகர்களனைவரும் போர்வீரர் பெருமையினை இத்துணைச் சிறப்புடன் கொண்டாடிவந்திருக்கின்ற கொள்கையின் இரகசியம் குறிக்கொள்ளலாகலாம். மரணத்தின்பால் அவ்வீரர் வைத்துள மதிப்பின் வகையே அவர்தம்மை அங்ஙனம் பெருமைப் படுத்தியிருக்கின்றது. மரணமானது தம்மைத் தேடி வரும்படி விட்டிருந்து வேறு வேறு காரியங்களில் வீணே உழன்றுகிடக்கின்ற ஏனையோரைப்போலல்லாமல் இவ்வீரர்தாமே மரணத்தைத் தேடிக்கொண்டு போகின்றனர். சாவு தம்மைத் தேடிவரும்படி விட்டுவிட்டவர், ஒருநாளும் வாழாதவர்; வாழ்க்கையில், தோல்வியடைந்துபோனவர்களும் இவர். சாவைத் தாமே சந்திக்கச் செல்கின்றவர், ஒவ்வொரு நாளும் முழுவாழ்க்கை வாழ்கின்றவர்களன்றியும் இறுதியில் தம் உயிர்கொண்டு அம்மறலியை வென்றவரும் ஆவார். மரணத்தின்முன் வீரமுடன் நிற்கவல்லவராவதே நல்வாழ்க்கை நடத்திய நிச்சயத்தைத் தெரிவிக்கின்றது. ஒன்றைப்பற்றிச் சந்தேகமில்லை—நமக்கு எத்தனையோ வித நன்மைகளைச் செய்ய முயல்கின்ற சீர்திருத்தகாரர்கள், இறத்தல் சரதமாய நிலையினின்றுரையும் விடுவிப்பதை, அவர் தாம் வாக்களிக்கின்ற 'நன்மைகளில்' ஒன்றாக்க வல்லவர்களல்லர். எனின், அவர்கள் சொல்லுவது அத்தனையுங் கைகூடினாலும், 'சுகமாக'ச் சாவதன்றி அவர்களிடத்திலிருந்து நாம் வேறு எதனை எதிர்பார்த்தல் கூடும். ஆம், மனுஷத்வத்திற்கு உரியதாகக் கொள்ளத்தகுந்தது எது? சுகமாகச் சாவதையோ, அல்லது, போர்க்களத்தில் சேவகனாகச் சாவதையோ பெற்றக்கால் பெருமை நமக்குண்டு. எல்லோரும் சாவார்: விக்கி விக்கி வியர்த்து உணர்வழிந்து படுக்கையோடு படுக்கையாய் ஒன்றினாற் கண்மூடிப் போவதனினும், விழிகள் இமைக்காமல் மரணத்தை வீரமுடன் எதிர்நோக்கி ஒன்றன் பொருட்டு மாள்வது எந்நாளும் உத்தமம் அல்லவோ!

ஒன்றினால் சாவது, ஒன்றன்பொருட்டு மாள்வது- இவ்விரண்டிற்கும்உள்ள ஒரு வேற்றுமையே, மிருகத்தன்மைக்கும் மனிதத்தன்மைக்கும்இடையே உள்ள வேற்றுமையாம். முன்னது [illegible] அழிவது, மற்றது மானுடப்பெருமைக்கு [illegible]. இவ்வேற்றுமையின் பெருமையை உணர்ந்திருந்ததாற்றான் கவிதையின் கருத்தெல்லாம் போர்வீரரை அத்துணைப் புனைந்து நனி பாராட்டலாயிற்று. செவ்விய மதுரஞ் சேர்ந்த சீரியவாழ்க்கையின் நல்லிலக்கணத்தை இவ் வேற்றுமையினின்று நாம் பெற்றுக்கொள்ளலாம். "எதன் பொருட்டு நான் இங்கு வாழ்கின்றேன்" என்றொரு கேள்வி உன்னையே கேட்டுக்கொள்; அதனிற்கு என்னவிடை வருகின்றதென்று பார். அவ்விடையாகி நிற்கின்ற பொருள் தன்பொருட்டு உன் உயிரையும் வாங்குவதற்குரிய தகுதி வாய்ந்ததோ என்று மீண்டும் கேள். உன் உயிரையும் விடற்குரிய தகுதி வாய்ந்ததாயின் அதன்பொருட்டு நீ வாழ்கிற வாழ்க்கை மானுடப்பெருமைக்கு ஏற்றதே. அந்தத் தகுதி அதற்கில்லையாயின், நீ அதன் பொருட்டு வாழ்வதும் வாழ்க்கையன்று" என்று இன்னபடியே ஒவ்வொரு நிமிடமும் நம்மை இடித்துரைத்துக் கொண்டிருக்கின்றது. வாழ்க்கையின் சோதனை இதனிற்கு இணங்குகின்ற வீரத்தில் அடங்கும்.

"எதன்பொருட்டு நீ சாவதற்கும்ஆயத்தமாயிருப்பாயோ அதன்பொருட்டே உயிர்கொண்டு வாழ்க" என்று எடுத்துரைக்கின்ற நம் மனச்சாக்ஷியை வஞ்சித்து வாயடக்கும்படி, "மற்றென், சுகமாயிருக்கும் பொருட்டு வாழ்கின்றேன். அதற்காக நான் இறக்க வேண்டிய அவசியம் காணவில்லையே" என்று எளிதில் எதிர் விளம்பிவிடலாம். ஆயினும், அம்மனச்சாக்ஷிக்கின்னும் வாயுளது: "சுகமாய் வாழும் பொருட்டு நீ சாவதற்கு ஆயத்தமாயிருக்கிறாயோ?" என்று கேட்கும்.இந்தக்கேள்வி சிரிப்பிற்கிடமானது."இறந்தபின் இங்குச் சுகமாக வாழ்வதெங்ஙனம்" என்னத் தடுத்துரைக்கின்றோம். "ஆயின், இறப்பதற்குரிய தகுதியில்லாத அச் சுகத்தின்பொருட்டு நீ வாழ்தல் ஆகாது" என்றுஉரைக்கின்றது மனச்சாக்ஷி. "வாழ்ந்தால் என்ன?". என நாம் எதிர் வினவினால், "அதனாற்றான் நீ அச்சுகத்தினைப் பெறாமல், நீயும் வருந்திப் பிறரையும் வருத்தி, இறுதியில் உன் உடல் வேவதன்முன் ஒவ்வொருநாளும் மனம் வெந்து வெந்து மடிகின்றனை, கண்டாய்" என்று மனச்சாக்ஷி கழறும்போது வாயடங்கி நிற்கவேண்டியவர் நாங்களே.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[199-வது பக்கத் தொடர்ச்சி]

### மாதராள் மதியின் திறம்

கம்பருடைய கருத்தைப் பொய்ப்பித்து இலக்குவன் தன்னை யீன்றவரெனத் தாயர் இருவரையே நினைத்து நின்றானெனின், கம்பர் அதுபற்றி வெள்கினாரோ வெகுண்டாரோ தேர்தல் அரிது. தன்னுடைய பாத்திரங்களின் செய்கைகளையும் சொற்களையும் தாம் தம் நாடக வுணர்வினால் கண்டு கேட்டபடி பாடுவதை விட்டு, அவர்தம் உள்ளத்தின் நிலையினை உணர்த்துரைக்கத் துணிந்த பொழுதெல்லாம் இப்படியே அப்பாத்திரங்களால் மறுக்கப்பெறுகின்றார். இலக்குவன் இங்குத் தன்னை யீன்ற தாயரை இருவராக்கியதோடு முன்னே, தயரதன் திருவில் தொடர் போக பௌவத்தைத் தோய்ந்தே கடந்தான் என்றதற்கு ஆற்றாத அம்மன்னன், "இனியது போலும் இவ்வரசை எண்ணுமோ" என்றக் கம்பரை அறைகூவி அழைத்ததும்*, தயரதன் அரசினைத் தந்தபோது இராமன் "காதல் உற்றிலன் இகழ்ந்திலன்" என்று கூறிய கம்பரை, அவ்விராமன் பின்னர்த் தான், மண் மேல் ஆசை வைத்தனன் என்றும், அரசினை வெஃகினான் என்னவும் கூறி மறுத்ததும்†, கம்பர் தம் நாடகக் கடமையைக் கடந்ததால் பெற்ற சில கூலி யென்னலாம். இப்படி இவ்விளவல் தன்னை ஆக்கிய புலவனுக்கறிவுறுத்தியபின், முன்னின்ற தாரையை நோக்கி, "நானும் என் சேனையும் தேவியைத்தேடித் தருவேனென்று முன் உரைத்த வாக்கை மறந்த சுக்கிரீவன் தன்மையை அறிந்துவரும்படி என்னை ஏவிய பணியினால் வந்துளேன். உயர்ந்த செல்வநிலையில் உறைந்திருக்கின்ற இந்தச்சுக்கிரீவனது செய்தியைச் சொல்" என்று வினவ, பெண்மையின் பெருமையெல்லாந் தன்னதே யென்னச் சான்ற கற்பினள் தாரை யென்பாள் இன்னன மிழற்றலுற்றாள்:—

> சீறுவா யல்லலை யைய
> சிறியவர் தீமை செய்தால்
> ஆறுவாய் நீய லான்மற்
> றாருள ரயர்ந்தா னல்லன்
> வேறுவே றுலக மெங்குந்
> தூதரை விடுத்த வெல்லை
> ஊறுமா நோக்கித் தாழ்த்தா
> னுதவிமா றுதவி யுண்டோ

[ஐயனே, கோபிக்காதே; சிறியவர் தீங்குசெய்தக்கால் அதனைப்பொறுத்துத் தணிவாயாக. இப்படிப்பொறுத்து ஆறவல்லவர் நீயன்றி வேறு ஆருளர். தவிர, சுக்கிரீவனும் மறந்தவனல்லன்; உலகமுழுவதும் தனித்தனி தூதரையனுப்பி அவர் வானர சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்துசேர்வதை எதிர்பார்த்தவனாய்த் தாமதித்திருக்கின்றான். நீங்கள் செய்த உதவிக்கு ஈடாகச் செய்யவல்ல ஓர் கைம்மாறும் உண்டோ]

என்ன முதலில், பிழைபொறுக்கும் ஒருபெருமையை இலக்குவன்பால் வேண்டலானாள். புரந்தரன் நடுங்கியோர் பூசையாய்ப் போனபின்னர், நிரந்தரம் உலகினுக்கு மாயா நெடும்பழி பூண்டாளாகி, "பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே" என்ன, வந்தெதிர் நின்ற தன் நாயகனுக்கு அறிவுறுத்திய அவ்வகலிகைக்கும், மற்று, "சிறியவர் தீமை செய்தால் ஆறுவாய் நீயலான் [illegible] ஆருளர்" என்று இங்கு வேண்டு

* இவ்விடயம், 1-வது வால்யூம் (1928) 351-வது பக்கத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றது.

† இவ்விடயம், 3-வது வால்யூம் (1930) 455-வது பக்கத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றது.



199212
199212
M211,N2-8KN
N35.1.14

கின்ற இத்தாரைக்கும் இடைக்கிடந்த தூரம், காலத்தாலும் இடத்தாலும் அன்றி, அமைதியின் சிறப்பினாலும் சாலப்பெரிது. தம்முடைய பிழையின் விளைவினின்று தப்பும்பொருட்டுப் பெரியபெரிய தருமநீதிகளைப் பிறருக்குப் போதிக்கப் புகுகின்ற பேதையர் இனத்திற் கொக்கவே இயம்பினாள் அக் கல்லுருத் தீர்ந்து நின்ற காரிகை. மாதவப்பன்னியாய் வாழ்ந்த நலத்தினால் அவள் கற்றிருந்ததைப் பயனுறச்செய்து கொண்ட விதம் அன்னது. இவ்வரிக்குலத் திறைவி, தானிழைத்ததோர் பிழைக்குச் சார்பாகப் பொறையுடைமையைப்புகட்டுவாளலள். மற்று, பிறர் பிறர்க்குத் தீமைசெய்தக்கால், அவ்விருவருக்கும் நடுநின்று கோபந்தணியக் கூறுமொரு பெருமைத்தாய் இவ்வாசகம் தன் உண்மைத்தொழிலைத் தகவுடன்நிகழ்த்திக்கொள்கின்றது. அன்னவள் பின்னும்,

ஆயிர கோடி தூத ரரிக்கண மழைப்ப வாணை
போயினர்புகுதுநாளும்புகுந்ததுபுகல்புக்கோர்க்குத்
தாயினு மினிய நீரே தணிதிராற் றரும மஃதாற்
றீயன செய்யா ராயின் யாவரே செறுந ராவார்

[ஆயிரங்கோடி தூதர்கள், குரங்குகளின் கூட்டத்தை அழைத்துவரும்பொருட்டுச் சுக்கிரீவனது ஆணையின்படி போயிருக்கின்றனர். அவர் தாம் திரும்புங்காலமும் வந்துவிட்டது. அதுதானன்றியும், சரணமடைந்தவர்களுக்குத் தாயைக் காட்டிலும் இனியரான நீங்களே கோபந்தணியக்கடவீர்; அதுதான் தருமமும் ஆகும். யாரும் உங்களுக்குத் தீமைசெய்யாராயின், உங்கள் தண்டனைக்கு ஏற்றவர்களாகியும் பொறுக்கப்படுவதற்கு உரியவர்களாய் அமைய வல்லவர் யார்.]

என்னக் கேட்கின்றாள். வெளிற்றுரை போன்ற இக்கேள்வியின் உள்நிலை மிகவும் ஆழமுடையது. "யான் மிக்க பொறுமை சாலியே, ஆயினும் இவன் இப்படித் தீங்கு செய்தக்கால் எனக்குக் கோபம்வாராமல் என் செய்யும்" என்னும் ஒருவஞ்சனை பலகாலும் வெளிப்படுத்தப்பெறாமலே இவ்வுலகினில் நடமாடுகின்றது. பிறரொரு தீங்குசெய்தபின்னன்றோ பொறுமைகூர்வதற்கு அமயமும் ஏற்படும்! இதனைச் சிறிது இங்கு இலக்குவனுக்கு நினைவுசெய்துதருதல் வேண்டுமென்றித் தாரை மனங்கொண்டது அவள் மதியின் திறம். அத்திறத்தினைப் பின்னுங் காணலாம்.—

அடைந்தவர்க் கபய நீவி
  ரருளிய வளவில் செல்வந்
தொடர்ந்துநும் பணியிற் றீர்ந்தா
  லதுவுநுந் தொழிலே யன்றோ
மடந்தைதன் பொருட்டால் வந்த
  வாளமர்க் களத்து மாண்டு
கிடந்தில ரென்னிற் பின்னு
  நிற்குமோ கேண்மை யம்மா

[நீங்கள், உங்களை அடைந்தவர்களுக்கு அபயம் கொடுக்கவே அதனால் அவர் அளவிலாச்செல்வம்வாய்க்கப்பெற்று, அக்களிப்பினால், உங்கள் கட்டளைக்குமாறாக நடக்கநேர்ந்தால், அதுவும் உங்கள் காரியமேதான் ஆகும் அன்றோ! இனி, பெண்ணின் பொருட்டாக நேரநிற்கின்ற கொடிய யுத்தகளத்தில் இவர் மாண்டு கிடக்காதவரானால், அதன் பின் நீங்கள் இவர்களுடன்கொண்ட அவ்வொருநட்பு நிலை பெறுமோ.]

என்னச் செவ்விக்குரிய நற்பொருளிற் சீரிய சொல்லொன்று செப்பலுற்றாள். குற்றமனைத்தையும் மெல்லமெல்லப் பெயர்த்துக் கொண்டுபோய் இராமலக்குமணர்களுக்கே சுமத்திய நீர்மை நினைவினிற்கொள்ளற் குரியது. அனைத்துமிவ் வுலகில் அவ்வொருபரம்பொருளே யென்றானபின், அன்று இராமன் அரணியம் புகுந்தநாள் தேவேந்திரன் அவனை எதிர்ப்பட்டு, "நிலையில்லாத் தீவினையும் நீ தந்தது அன்றே" என்று வினவியவண்ணம், கடவுளின் பணியினைச் சிலர் கைவிட்டால் அதுவும் அவன் தொழிலேயன்றி வேறொன்று ஆவது எங்ஙனம் எனத் தாரை வினவுவதற்குத் தக்க விடை யாரே உரைக்க வல்லார். இறைவனது பணியினின்று கழலும்படி நம் அறிவை மயக்கவல்ல அளவில்லா ஆற்றலுடையது செல்வமெனச் செப்புவர் உலகியல் திறமறிந்த மேலோர். மங்குறு செல்வத்தின்வலையிற்படுத்திப் பின் பணியிற்றீர்ந்தாரென்றம் மக்களை ஒறுக்கவந்தால் இறைவன் தகைமையை என்னென்பது! இன்னதே வினவுகின்றாள் இங்கித் தாரை. தன்னால் விளைந்த தன்மையைக் கண்டக் கடவுள் தானே நாணவேண்டுமென்பதல்லால் பிறரைக் கடிவது அறமென்றாமோ! இலக்குவனும், அவ்விராமபிரானுக்குப் பிரதிநிதியாய்நின்று சிறிது பின்னர் "அருள்வர நாணுட்கொண்டான்" என்பர் நம் கம்பர். நாம் செய்யுந் தீமைகண்டு "இதுவுந் தன் தொழிலே" என்று இறைவன் நாணவேண்டுவதன் அமைதி ஒருபுறமிருக்க, நம்முடைய பொறுப்பு அதனோடு தீர்ந்ததென்று எண்ணிக்கொள்ளுமொரு வஞ்சனைக்கிலக்காக லாகாதென்பதையும் இத்தாரை,

செம்மைசே ருள்ளத் தீர்கள் செய்தபே ருதவி தீரா
வெம்மைசேர்பகையுமாற்றியரசுவீற்றிருக்கவிட்டீர்
  [தொன்றோ
உம்மையேயிகழ்வரென்னினெளிமையாயொழிவ
இம்மையேவறுமையெய்திருமையுமிழப்பரன்றோ

[செம்மையான மனத்தையுடைய நீங்கள் செய்த பேருதவி நிலைநிற்கும்படி கொடிய பகைவனையும் ஒழித்துச் சுக்கிரீவன் அரசசெல்வத்தில் சிறப்புடன் இருக்கும்படி விட்டீர். அதனாற்றானே தாம் மயங்கினாரென்று அவர் உங்களையே இகழ்வாரானால், தாம்செய்த பிழையின்பழி அத்துணை எளிதில் தீர்ந்துவிடுமோ! இப்பிறவியிலேயே வறுமையடைந்து இம்மை மறுமை என்னும் இரண்டுபயன்களையும் இழந்து விடுவார்களன்றோ]

என அமைதியின் எடுத்துக் காட்ட அயர்ந்தாளல்லள். இதன்மேல்,

ஆண்டுபோர் வாலி யாற்றன்
  மாற்றிய தம்பொன் றாயின்
வேண்டுமோ துணைவர் நும்பால்
  வில்லினு மிக்க துண்டோ
தேண்டுவார் தேடு கின்றீர்
  தேவியை யதனைச் செவ்வே
பூண்டுநின் றுய்தற் பாலார்
  நுங்கழல் புகுந்து ளோரும்.

[அப்பொழுது, போர்வல்ல வாலியின் ஆற்றலை அழித்தது உங்கள் ஒரு அம்பு என்றால், உங்களுக்கு உதவியாக வேறு துணைவர் வேண்டுமோ. உங்களிடத்திலுள்ள வில்லைக்காட்டிலும் சிறந்தஉதவி உங்களுக்கு வேறுஉண்டோ! நீங்களோ, சீதையைத்தேடித்தரவல்லவர்களைத்தேடுகின்றீர். உங்களைச் சரணமடைந்துள்ள சுக்கிரீவனும், அதனை ஏற்றுக்கொண்டு உய்யக்கடவாராவார்.]



எனக் கூறித் தகவுடைத் தன் மென்மொழிகளை இனிதின் முடித்தனள். சுக்கிரீவன் களிப்பினால் காலந் தாழ்த்துக் கிடந்தது குற்றமேயென்பதைக் கூசாமல் ஒவ்வினாள், அக்குற்றத்தில் இராமனுக்கு ஒரு கூறு உண்டென்பதையும் மெல்ல மெல்ல இசைத்தனள், சுக்கிரீவனும் தனது கடமையை முற்றிலும் அயர்ந்தானுமல்லன் என்பதை அவன் சேனை திரட்டுமாறு தூதர்களைப் போக்கியுள பெற்றியைப் பகர்ந்து காட்டினாள், எது எங்ஙனமாயினும் அவனைப் பொறுப்பதே பெருமை யென்பதையும் அறிவுறுத்தினாள். இம்மொழியனைத்தும் இலக்குவனது சீற்றத்தைத் தணிக்கவல்ல தன்மை வாய்ந்தன. தன் தனி நாயகனைத் தொலைத்த அச்சுக்கிரீவன்பொருட்டு நாநல்கூராமல் இப்பெருமகள் தாரை வகுத்துரைத்த மொழிகளின் மென்மையும் நயமுமேயன்றியும், அவளது கற்புறு துயரின் தோற்றமும், கொண்டிருந்த கோலத்தின் எளிமையும், பெண்மையின் அடக்கமும், நாவும்ஒலியுமில்லா மொழிகளால் இலக்குவன் இதயத்தைச் சால இளகச்செய்திருத்தல் வேண்டும். ஆதலின்,

என்றவ ளுரைத்த மாற்றம்
  யாவையு மினிது கேட்டு
நன்றுணர் கேள்வி யாள
  னருள்வர நாணுட் கொண்டா
னின்றன னிற்ற லோடு
  நீத்தனன் முனிவென் றுன்னா
வன்றுணை வயிரத் திண்டோண்
  மாருதி மருங்கின் வந்தான்.

[இவ்வாறு அவள் சொன்ன வார்த்தைகளை இனிது கேட்டு, நன்று உணர்ந்த கேள்வியறிவுடையவனான இலக்குவன், கருணைசுரக்க வெட்கங்கொண்ட மனத்தினனாய் நின்றான். அப்படிநின்றபோது, வலிய போர்த்துணையாகவுள்ள வயிரம் போன்ற உறுதிவாய்ந்த இருதோள்களையுடைய அனுமான், இலக்குவன் கோவந் தீர்ந்துவிட்டான் என்பதை எண்ணி, அவனுக்கு அருகு வந்துசேர்ந்தான்.]

இலக்குவனது மனத்தின் பதம்பார்த்திருந்த மாருதி செவ்வி நோக்கி அருகு சேர்ந்து தன் வன்துணை வயிர்த்திண்டோள்களை ஒடுக்கிக்கொண்டு நிற்பவன் ஆனான்.

---

## உருபு மயக்கம்

(சிறு கதை)

[207-வது பக்கத்தொடர்ச்சி]

இந்திரேசன் இசைத்ததுகேட்ட அவன் நற்றாய் மங்களாங்கி, "மனத்தின் திட்பமும் தசையின் செறிவும், மைந்தா, போதா; இதயத்தின் மென்மை இன்மையால் இங்ஙனம் நீ இயம்புகின்றாய். உன் தந்தைக்கு உற்றுளசிந்தனையை உரைக்கின்றேன், கேள்: இவ்வரசு தன்னுடைமை யாவதையும் அதற்குப் பின்னுரிமை ஆவோரையுங் கருதியொன்றுஞ் சூழ்கின்றாரல்லர். அவர் இப்பொழுது அடைவதற்கு அவாவி நிற்பதெல்லாம் ஒன்றுதான். நான் உரைத்தாலும் அதன் அருமையை நீ உணரவோ வல்லையல்லையென அஞ்சுகின்றேன். ஆயினும், மன்னவன் செயலையும் நிலையையும் நீ பிறிதாக ஐயுறாவகை அதனை உனக்கு நான் உரைத்தல் கடன்" என்றனள். "அன்னையே, நின்கடனைச் செலுத்தற்கு அமயம் வேறு பார்க்கிலையாயின் இயம்புதி; மற்று இன்று நின்று நீ இயற்றவல்லது வேறு. நின் நாயகன் கைகளில் நீளிலை வேலினை நீட்டுவதன்றோ, என் தந்தை இந்தச் சாளரத்தினூடு கண்டறிந்த பிரபஞ்சத்தினின்று மத்திரனுக்கு நாம் கொண்டுசென்று உரைத்தற்குரிய மறுமொழியாம். இல்லையேல் யான் மதிலின்மீதேறி நம்பகைவர் தாள்களில் வீழ்ந்து மாள்கிறேன்" என இந்திரேசன் தன் துணிவைத் தெரிவித்து அரசன்முன்சென்று வணங்கினான்.

செய்யற்பாலது யாதென்று அறியாமற் றிகைத்தனன் அரசன். தன்முன் வணங்கிய தனயனைக் கண்களால் வாழ்த்தினான். "நகரத்தின் வாயிலைத் திறந்து பகைஞரை உள்ளே விடுக, என்றேனாயின், மகனே, என் மருமத்தை நீ அறியாய், மற்று யான் என்செய்வேன். நீயும் நானும் உனது அன்னையோடும் கானகம் நண்ணிவாழ்வோம். இந்நாட்டினை யார்காத்தால் என். மத்திரத்தரசனும்மனிதரைமாய்ப்பானல்லன்," என்று மந்தரேசன் இயம்பிவரும் அளவில், அமைதியற்ற சனங்கள் பலர் அவ்வரண்மனையைச் சுற்றிக் குழுமுகின்ற ஒலி கேட்டது. உள்ளிருந்த மூவரும் அதனை நோக்கினர். அரசன் புன்னகை புரிந்து தன் ஆதனத்தில் மீண்டும் அமர்ந்தனன். இந்திரேசன் தன் தாயினை நோக்கி, "நம் நகரவீரர், வாளாவிருக்கும் இம் மன்னவனை மருட்ட வருகின்றனர். என் தந்தையின் சிந்தனை ஏதென்று அவர்களுக்கு யான் இயம்புகேன்" என்ன, மங்களாங்கி, "இந்திரேச இது கேள், கடவுளில் தம் சிந்தையை வைத்திருக்கின்றாரோ, அல்லது தம் சிந்தையில் கடவுளை வைத்திருக்கின்றாரோஎன்னும் உண்மைதெளியாமல் திகைப்புற்றிருக்கின்றார் மன்னர்பிரான். இதனைத்தேர்ந்துகொள்ளும்வரையில் அவர்மனத்தினில் வேறொன்றிற்கும் இடமில்லை. மத்திரனும் நம் நகரமக்களும் காத்திருக்கவேண்டியதே கடன். இந்நிலையில் உனக்குத் தகுதியென்று தோன்றுவதை உன் சித்தத்தின்படியே செய்யலாம். இதன் விளைவு யாவதாயினும் அதனை என்னொருநாயகனோடுஉடன்நின்றுஏற்றுக்கொள்ளயானுளேன்" என்று உரைத்துநின்றாள். ஆயிரம் சூரியர்களைத் தன்னுள்ளே வைத்துள ஒரு சந்திரன் என்ன அவள் முகம் பொலிந்தது.

இந்திரேசன் இடியிடியெனச் சிரித்தான். "பித்தத்தைத் தெளிவிக்கவல்லவொரு மருந்தாம் கடவுள் என்று பெரியோர் கூறுவார், கேட்டுளேன். இப்பொழுது அக்கடவுள் நமதரசனைப் பித்தத்தின் எல்லையைக் கடந்து அப்பாலுங் கொண்டுபோய்விட்டது. அன்னையேஅன்னையே, உன் சாளரம் செய்வதொன்

ரோ'' என்று வெறுப்புக் கைம்மிகப் பகர்ந்து, அம்மாளிகையை விட்டிறங்கி, மறுகினிற் குழுமிய வீரர் குழுவினுள்புகுந்து, "கேட்டீரோ செய்தி, கடவுளில் தன் சிந்தையை வைத்திருக்கின்ருனே, அல்லது தன் சிந்தையில் கடவுளை வைத்திருக்கின்றனனே என்றவொரு ஐயத்தூடே ஆழ்ந்திருக்கின்ருனும் நம் அரசன். அதுதெளிந்து கரையேறும்வரையில் மத்திரர்கோன் காத்திருக்கவேண்டுவதே கடனும். இல்லையேயாயின் தக்கதென்று நமக்குத் தோன்றுவதை நாம் இயற்றலாமாம்'' என்று விளம்புமளவில் அங்குக் குழுமியிருந்தோர் பேரிடி புரண்டதென்னச் சிரித்து முழங்கினர். ஆயினும், அச்சிரிப்பு மிக விரைவில் பெரியதோர் கலகமாகக் கரைந்து பரவியது. தானைத் தலைவன் தன்னுடன் இருந்தோரை நோக்கி, "வீரர்காள் வாருங்கள், நம் வேந்தனது கழுத்தின்மேல் தலை நிற்கின்றதோ, அல்லது தலையின்கீழ் கழுத்து நிற்கின்றதோ, சென்று ஆய்வோம்; அதுவரையில் மத்திரர்கோன் மதிற்புறத்திற் காத்திருக்கவேண்டியதுதான்'' என்னச் சாற்றி ஏக முயன்றனன். அப்பொழுது அங்கிருந்த வீரர்களில் ஒருவன், அரசிளங்குமரனுக்குஅறிவிக்காமல் யாதும் நாம் செய்தல் அழகன்று என்று கூறியதற்கிணங்கி அவன்முன் வந்து, "எங்கள் இளவரசே, நம் வீரர் அரசன்முன் சென்று, தாமுற்ற கடுஞ்சினத்திற்கு அடுத்தது செய்யவே அவாவுகின்றனர். இவர்தமைத் தடுத்தலரிது; உன் கருத்து யாது'' என்று தானைத்தலைவன் வினவினன்.

இந்திரேசன் முகத்தில் சிந்தனை தேங்கியிருந்தது. அவனது மனமோ நெடிதிருந்த வொன்றினை நாடியதென்பதை அவன் கண்கள் தம் பார்வையால் தெரிவித்தன. படைத்தலைவன் அவனைப் பணிந்து, "உன் சிந்தனை யாது?'' என்று மீண்டும் வினவினன். "என் சிந்தனையை நான் கூறினும் நீங்கள் உணரமாட்டீர், என்ன செய்வேன்'' என்றான். அப்போது அங்கிருந்தவர், "அரசன் மைந்த, இங்ஙனம் எம்மை அவமதித்திட வேண்டா......'' என்றனர். "ஆம், நான் அரசன் மைந்தனே. என் தந்தையின் சிந்தனையே, என் சிந்தனையுமாம். முன்னே அவர் நிலைகண்டு அதுபேதைமை எனச் சிரித்தேன். ஆயினும் அக்கேள்வியின் அருமையும் அதிசயமும் என்னுள்ளத்தில் ஆழ்கின்றன. கடவுளை நம்பி வாழ்கின்ற வாழ்க்கையர், அக்கடவுளில் தமது கருத்தை வைத்திருக்கின்றனரோ, அல்லது தம் கருத்தில் அக்கடவுளை வைத்திருக்கின்றனரோ, என்பதையான் அறிந்து தேறும் வரையில் நீங்களுங் காத்திருக்கவேண்டியதுதான். இம் மத்திரத்தரசன் நம் நகர் மதிலிற்கு இப்புறத்தான் ஆயின், அப்புறத்தான் ஆயின், என்!'' என்று சாற்றினன்.

இதனைக்கேட்டவர் எய்திய திகைப்புச் சிறியதோ அன்று; வெகுளவும் வெகுண்டார். படைத்தலைவன் வெறுப்புற்று அவ்விடம்நீங்கிப் பகைவருக்கு நகர வாயிலைத் திறந்துவிடும் கருத்தினனாகித் தன்னுடன் இருந்தவர்களை அழைத்தான். அவர்களோ, முனைவார்போற் சிறிது முழங்கிப் பிறகு, கடவுளில் கருத்தோ அல்லது கருத்திற் கவுடளோஎன்னும் அந்தக் ஒரு கேள்வியின் அருமையில் தாமும் ஈடுபட்டிருப்பதாகக் கூறிச் சும்மா விருந்துவிட்டனர். "என்னவிது, இந்நகரத்துள் எல்லோரும் இப்படிப் பித்தேறுகின்றனர்'' எனப் படைத்தலைவன் சினந்து, மதிலிலுள்ள ஒரு சிறு மறைவழியாக வெளிப்பட்டு மத்திர மன்னவன் இருந்தவிடம் ஏகி, "மன்னவா, எம் வேந்தனும் அவன் மைந்தனும், வீரர்களும், கடவுளில் தம் கருத்தை வைத்திருக்கின்ருரோ, அல்லது தம் கருத்தில்தான் கடவுளை வைத்திருக்கின்ருரோ என்பது தெரியாமல் ஊசலாடும் உள்ளத்தினர்களாயுழல்கின்றனர். நகர வாயிலை நானுனக்குத் திறந்துவிடுகின்றேன். நின்னொடு போர்செய்யாத இவ்வூரைச் சூறையிடாமல் நீ கொள்க'' என்ற வாங்கே, "ஆம், சிந்திக்குமளவில், அறிவுடையோர்க் கெல்லாம் அவ்வையம் அமையத்தக்கதே யென்று எனக்குந்தான் தோன்றுகின்றது. அதனை நான் தெளிந்துகொள்ளும் வரையில், நான் இந்நகர வாயிலைத் திறந்துவிடுவதற்கு நீங்கள் காத்திருக்க வேண்டியவர்களே'' என முடித்துச் சும்மா விருந்துவிட்டான்.

மத்திரமன்னவன் உற்றவியப்பு மதிக்குந் தாத்ததன்று. இவனுக்கு முன்னே இதனைக் கேட்டவர் பலர் செய்தது போலவே இவனும் இடியிடி யெனச் சிரித்தான். சிரித்து, தன் படைஞரை யழைத்து, மதிலை எறிவதற்கு ஆயத்த மாம்படி பணித்தான். அவர் ஆயத்தமாகி அரசனிடம் வந்துநிற்க அவன் அவர்களை நோக்கி, "வீரர்காள், கடவுளில் என் கருத்தை வைத்திருக்கின்றேனே, அல்லது, என் கருத்தில் கடவுளை வைத்திருக்கின்றேனே'' என்னும் சிந்தனை இப்பொழுது என்னையுஞ் சூழ்ந்துகொள்கின்றது. அது தெளியும் வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டியதுதான்'' எனச் சாற்றிச் சும்மா விருந்துவிட்டான்.

மத்திரன் படையெல்லாம் மனமருண்டு நின்றது. இம் மருட்கையினின்று வெகுளியோடு வெறுப்பும் பிறந்தன. தாமே எழுந்து நகரைத் தகர்ப்பதென்னத் தொடங்கினர். அதற்குள்ளே அந்நகரமாக்கள் வாயிலைத் திறந்து வெளிப்போந்து "எங்கள் அரசனேமுதல் வீரர்கள் யாவரும் பித்தராயினர். இனி இந்நகர் உங்களுடையது,இயைந்தன செய்மின்'' எனப் பகைகொண்டு வந்தர்பால் பகர்ந்தனர். மத்திரன் படைஞரோ மயங்கிய கண்ணினர் நெடிதுயிர்த்த நாசியர், "மக்காள், கடவுளை எம் கருத்தில் வைத்திருக்கின்றேமோ, அல்லது கடவுளில் எம் கருத்தை வைத்திருக்கினருேமோ இதனை யாம் தேர்ந்துகொள்ளும் வரை நீங்கள் காத்துத்தான் இருத்தல் வேண்டும்'' என்னத் தனித்தனி இயம்பிச் சும்மா விருந்துவிட்டனர்.

இப்படியே மாந்தார நகரத்தின் உள்ளும் புறமும் ஒரு அமைதியில் ஆழ்ந்திருக்க, அவ்வயின் ஒரு மெய்யுணர் முனிவரர் வரலானர். நொச்சியும் உழிஞையும் இங்ஙனம் சித்திரச் செய்திபோல் வாளாவிருப்பக்கண்டு உற்றதுயாதென வினவலும், கடவுளில்தம் கருத்தைவைத்திருக்கின்றனரோ, அல்லது, தம் கருத்தில் கடவுளை வைத்தருக்கின்றனரோ என்றவோர் கேள்வியை அவரவர் உட்கொண்டு அமர்ந்திருந்தனர் என்பது அறிந்தார். ஏனையோர்போலஇம்முனிவர்க்கும் முதலில் நகைவந்தது. இந்நிலையின் அருமையினை நினைந்து வியந்தார். எனினும், ஏனையோர் போல்அல்லாமால் மிகவிரைவில் தெளியவும் தெனி



லானர். "என்னிது என்னிது - இம்மன்னவர் மதியிருந்த வண்ணம்! கடவுளைக் கருத்தில் வைப்பதும், கடவுளில் கருத்தைவைப்பதும் எல்லாம் இறுதியில் ஒன்றே யாயவோர் உருபுமயக்கமே. எனினும், இதனை நான் இவர்களுக்கு எடுத்தியம்பலாகாது. சில ஐயங்கள் தெளியாமையே சிறப்புடைத்தாம். இவ்வகை ஐயங்களைக் கொள்ளுங்கால் ஒருவன் மனிதனினும் மேலான தெய்வத்தன்மை யடைந்தவனாகின்ருன். அதனைத் தெளிந்தபின் மனிதனாக நிலைநிற்பதற்குப் பின்னும் மேலான அறிவு வேண்டும். அத்துணையறிவு மக்களிடத்தில் எதிர்பார்ப்பது அரிது. ஆதலின் இவர்களை இவ்வுத்தமமான கேள்வியிற்றானே நிலைக்கவிட்டு நான் நீங்குவதே நலம்'' என நினைத்து அகன்றுபோயினர்.

உழைப்பதற்குரிய வொன்றும் இவ்வகை உருபு மயக்கம். இது தெளிவினும் நல்லது: அத்தெய்வமே தந்தது.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து, 5-ம் தசகம்.
[206-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்.

சூழல்கள் சிந்திக்கின் மாயன்
கழலன்றிச் சூழ்வாரோ
வாழப் பெரும்புனல் தன்னுள்
அழுந்திய ஞாலத்தைத்
தாழப் படாமற் றன்பாலொரு
கோட்டிடைத் தான்கொண்ட
கேழற் றிருவுரு வாயிற்றுக்
கேட்டு முணர்ந்துமே.

பதக்குறிப்புகள்:—தாழப்படாமல் - இப்பூமி இப்பாசுரத்தில் செப்பிய பிரளயத்தில் பாதாளத்தினில் ஒட்டிக்கிடந்தது. ஏற்கனவே தாழ்ந்துபட்டபூமியை, யாதொரு தாமஸமுமில்லாமல் விரைவாகஎடுத்தான் என்பதுபொருள். கேழல் - வராஹம்; கேட்டுஉணர்ந்தும்-காதால்கேட்ட அளவு போதாது-அதை உணர வேண்டுமென்கிருர். கோடு - தந்தம்போல் இருபக்கமும் வளர்ந்த கொம்புகள்.

பொழிப்புரை:—கிணற்றிலே விழுந்த தன்னுடைய குழந்தையைத் தாயானவள் ஆசையின் மிகுதியாலே உடனே விழுந்தெடுக்குமாப்போலே வீழ்ந்து ரஸாதளத்தில் மூழ்கி உருவழிந்த பூமியை வராஹரூப வேஷம் எடுத்து, விழுந்து முழுகிய அந்த நிமிஷத்திலே சென்று முழுகி யெடுத்தருளின இம்மஹா குணத்தைக் கேட்டு இந்தஆச்சரியத்தைத் திரும்பி உணர்பவர்கள் தங்களுக்கு ஒரு புருஷார்த்தத்தைத் தேடி வேண்டமாட்டார்; அந்த ஆச்சரியபூதனுடைய திருவடிகளல்லாமல் மற்றதைத் தங்களுக்கு உதவவேண்டுவாரோ.

---

6-ம் பாசுரம்.

கேட்டு முணர்ந்தவர் கேசவற்
காளன்றி யாவரோ
வாட்டமிலா வண்கை மாவலி
வாதிக்க வாதிப்புண்
டீட்டங் கூடித் தேவர்கள்
சென்றிரந்தார்க் கிடர்நீக்கிய
கோட்டங்கை வாமனனாய்ச் செய்த
கூத்துக்கள் கண்டுமே.

பதக்குறிப்புக்கள்:— வாதிக்க - பாதிக்க வென்ற வடசொல் திரிபு-ஹிம்ஸை செய்ய; வாதிப்பு உண்டு - கேடு உண்டாகி, ஈட்டம் கூடித் தேவர்கள் - தேவர் ஒன்று சேர்ந்து - தேவதைகளுக்குள் ஒருவர் ஒருவருக்குள்ளே பொருமையால் ஒத்து ஒன்று சேர்ந்து மஹாபலிச் சக்கரவர்த்தியை வெல்லச் சக்தியற்றுத் தோற்றுப்போன பின்பு, தேவர்கள், ஆலோசனைக்காகக் கூட்டம் கூடினார்கள். அக்கூட்டத்தின் மந்திராலோசனையில் பகவானை யாசித்து உதவிபெற்று மஹாபலியை ஜெயித்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்கள். மஹாபலி அசுரனானுலும் யோக்கியனாய் நீதியாய் நடந்ததாலும் ஔதாரிய ஸ்வபாவனாயிருப்பதாலும், அவனைத் தண்டித்து வெல்லுவதைக் காட்டிலும் முன் தோற்றுப்போன தேவர்களிடத்திலிருந்து மகாபலி ஆக்கிரமித்துக் கைப்பற்றிய உலகங்களை, அவன்கை மேலும் தம்திருக்கரங்கள் யாசகம் வாங்குகிறவன்போலத் தாழ்ந்தும் இரு கை சேர்த்துப் பரப்பித் தானமாக வாங்கிக்கொண்ட திவ்விய சரித்திரத்தை இப்பாசுரம் விவரிக்கிறது. மஹாபலியின் ஔதாரிய சுபாவங்கொண்டு "வாட்டமிலான்'' என்ருர். கோட்டங்கை-தானம்வாங்கக்குவிந்ததிருக்கரங்கள். செய்தகூத்துக்கள் - பண்ணிய பல திவ்விய சேஷ்டைகள். அதாவது அன்றே பிறந்து அன்றே வளர்ந்து அன்றே பிரம்மாசாரி பிக்ஷைவாங்க அதிகாரம் பெற்று மஹாபலி யக்ஞசாலையில் கிருஷ்ணாஜிநமும் யக்ஞோபவீதமும் முஞ்சியுமான விரதவேஷத்துடனே வந்து நின்று "கொள்வன் நான் மாவலி மூவடிதா''வென்று தழுதழுத்த மழலைச் சொல்லைச் சொல்லி யாசித்துச்சிறிய காலை காட்டிப் பெரியகாலினாலே யளந்துகொண்ட இந்த ஆச்சரிய சேஷ்டிதங்கள்''-இருபத்திநாலாயிரப்படிஉரை. வாமனன் பெருமையைக் கேட்டு அதன்சூக்ஷ்மங்களை மனனம்செய்பவர் கேசவனுக்குத் தவிர மற்றவர்க்குத் தாஸராகுவாரோ? பிரம்மன் பரம்பொருள் ஈசன் எல்லாவரிலுமுள்ளிருந்துநடத்துபவன்என்பதைக்"கேசவன்'' என்னும் பதம் குறிக்கின்றது.

---

7-ம் பாசுரம்.

கண்டுந் தெளிந்துங் கற்றார்கண்ணற்
காளன்றி யாவரோ
வண்டுண் மலர்த்தொங்கன் மார்க்கண்
டேயனுக்கு வாழுநா
ளிண்டைச் சடைமுடி யீச
னுடன்கொண் டுசாச்செல்லக்
கொண்டங்குத் தன்னொடுங் கொண்டுடன்
சென்ற துணர்ந்துமே.

உரை:—வண்டு உண் மலர்-வண்டுகள் பூக்களின் மகரந்தத்தை மொய்த்துண்கிற, தொங்கல்-பூக்களால் தொடுக்கப்பட்ட மாலைகளால் தாய்தந்தையர்களால் அலங்கரிக்கப்பட்ட மார்க்கண்டேயனுக்கு,வாழ்நாள்

செல்ல - ஆயுஸு காலம் அபமிருத்தியு பீடை இல்லாமல் நீடித்தலின் பொருட்டு (செல்ல என்பதோடு அந்வயம்) இண்டை - ஜடை முதலிய கேச பாரத்தால் நிரம்பிய சடைமுடி, ஈசன் - ருத்திர மஹேசுவரன், உசா - தன்னை யடுத்த மார்க்கண்டேயனை ஆதரவோடு அவன் குறையை நீக்கவேண்டி விசாரித்து யோஜனை செய்ய, உடன் கொண்டு - அவனைக் கூட்டிக்கொண்டுசெல்ல-ஸர்வேசுவரனைக் கிட்டிச்செல்ல, அங்கு - அந்த ஸமயத்தில், கொண்டு - அவனை அங்கீகரித்தது, அதாவது அவனுக்கு மிருத்தியுபயமில்லாமலாக்கியதுமல்லாமல், தன்னெடும் கொண்டு - தன் ஸொந்த பக்தனுகவும் ஆக்கி, சென்றது - பண்டைக் காலத்தில் ஏற்பட்ட சரித்திரத்தை, உணர்ந்துமே - கேட்டுத் தெரிந்துகொண்டவர், கண்டுந் தெளிந்தும் - புராணத்தால்தெரிந்தும், தத்துவங்களின் நிச்சயமுள்ளவர்கள், கண்ணனுக்கு ஆள் அன்றி யாவரோ - கண்ணபிரானுக்குத் தாஸனுகாமல் வேறு ஆசிரயம் தேடுவார்களோ.

---

# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —"Othello "]

அங்கம் 2. களம் 1.

[201-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் நகரப்

பெருமகன் திரும்பி வருகிறுன்.

காஸ்ஸியோ:—என்ன செய்தி! வந்திருப்பதுயார்?

2-ம்- நக. பெரு:—அது,இயாகோ என்பவன் ஒருவன். தளகர்த்தனுக்குப் பதாகையாளன்.

காஸ்:—நலமுற இனிதாய வேகம் வாய்த்திருக்கின்றது அவனுக்கு[1] ; சூருவளியேயும், உயர் கடலும், ஊளைசெய் ஊதையும், அரிப்புற்ற பாறைகளும், குழுமிய மணல்களும் - கப்பலின் குற்றமற்ற அடிமரத்தைத் தடுப்பதற்கு ஆழ்ந்த வஞ்சகர்—அழகின் அறிவு அமைந்தனவா மென்ன, தெய்வத்தன்மை டெஸ்டிமேனுவைத்தீதின்றிக் கடக்கவிட்டனவாய்த் தம் மாய்வுறு மியற்கைகளைத் தவிர்தனுற்றன.[2]

மான்டானே:—யாவள் அவள் ?

காஸ்ஸி: — அவளே, நான் பேசியவள் ; எங்கள் பெரும் அதிகாரிக்கு அதிகாரி[3] ; தீர இயாகோவினுல் அழைத்துவரும்படி விடப்பட்டவள். அவள் இங்குக் கால்வைத்தது, எங்கள் எண்ணங்களை இரவு ஓர் ஏழின் வேகத்தால் முந்தியிருக்கின்றது [4]. மஹாஜோவே, இக்கடலினை அவன் தன் நீண்டகப்பலால் வாழ்த்தி, டெஸ்டிமோனுவின் கரங்களிற் காதலின் விரைவுடை உயிர்ப்பினைச் செய்து, அணைந்திருக்கும் எம் ஊக்கத்திற்குப் புதிதாய அனல்தந்து, ஸைப்ரஸ் முழுவதற்கும் சுகத்தினைக் கொணர, ஒத்தெல்லோவைக் காத்து அவனது இதையை நின்றன் ஆற்றல்

டெஸ்டிமோனுவின் அழகினைக் காஸ்ஸியோ மான்டானேவுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும்போது, துறைமுகம் அடைந்த கப்பலில் வந்திருப்பது யாரென்று பார்க்கச் சென்ற இரண்டாம் நகரப் பெருமகன் திரும்பி வருகின்றான்.

(1) அவனுடைய கப்பல் இடையூறின்றி இனிதாக வேகமுடன் வந்து சேர்ந்திருக்கின்றது. டெஸ்டிமோனு அக்கப்பலில் இருந்ததே, அது தீதுறுமல் வந்து சேர்ந்ததற்குக் காரணமாம் என்று இதனைத் தொடர்ந்து கூறுகின்றான்.

(2) சூருவளி = சுழல்காற்று. ஊளைசெய் ஊதை - ஊளையிடுவதுபோல் இரைகின்ற கடுங்காற்று. அரிப்புற்ற பாறைகள் = நீரினுல் அரிக்கப்பட்டிருக்கின்ற பாறைகள். குழுமிய மணல் = மேடிட்ட மணற் குவியல்கள்.

இவைகளெல்லாம் கப்பலை உடைக்கின்ற தன்மையனவாயினும், தெய்வத்தன்மை பொருந்திய டெஸ்டிமோனு அக்கப்பலில்வருகின்றுளாதலின், அழகின் தரம்தெரிந்து அவ்வளவு அழகிக்கு இடையூறு செய்யலாகாது என்று எண்ணின வென்ன, அவைகளுக்கு இயற்கையாகவுள்ள அழிக்கின்ற தன்மையைத்தவிர்ந்து அவள் தீதில்லாமல் கடக்கும்படி விட்டன என்பது—பொருள்.

கப்பலின்......வஞ்சகர்—என்பது இடைப்பிறவரல். வஞ்சகர் என்னுஞ் சொல், குழுமியமணலோடு பாறைகளையும் குறிக்கும்.காற்றும் கடலும் கப்பலை வெளிப்படையாக எதிர்ப்பன. பாறையும் மணலும் கடலுள் கரந்திருந்து கப்பலின் அடிமரத்தைத் தடுத்துத் தகர்க்குமாதலின் அவை 'வஞ்சகர்' என்று அழைக்கப்படுகின்றன.

ஆழ்ந்த வஞ்சகர், என்பது கடலில் ஆழ்ந்து மறைந்திருக்கின்ற வஞ்சகர் என்றும், அல்லது,வஞ்சனையிலேயே தோய்ந்துமிகுந்திருப்பவர் என்றும்,இரண்டு விதமாகவும் பொருள்படலாம்.

(3) எங்கள் தலைவனுகிய ஒத்தெல்லோவிற்குத் தலைவியாயமைந்து தன்காதலின்ஆட்சியை அவன்பால் செலுத்துகின்றுள் என்ற பொருள்பட இங்ஙனம் பரிகசமாகக் கூறுகின்றனன்.

(4) நாங்கள் எதிர்பார்த்ததற்கு ஏழு நாட்கள் முந்தியே அவள் இங்கு வந்து சேர்ந்திருக்கிறுள்—என்பது இதன் பொருள்.

(5) ஜோவ்—ரோமர்களின் பிரதானமானதெய்வத்தின் பெயர். 'மஹா ஜோவே......செய்வாயாக" என்று முடித்துக்கொள்க. ஒத்தெல்லோ தீதின்றி இங்கு விரைவில் வந்துசேரும்படிஅருள்புரிக-என்று காஸ்ஸியோ ஜோவை வேண்டிக்கொள்கிறுன்.

இக்கடலினை......வாழ்த்தி = தன்னைச்சுமக்கின்ற கப்பல் செல்லும்படியான பாக்கியத்தைக் கடலுக்கு அளிக்கும்படியும்.

டெஸ்டிமோனுவின்......செய்து = காதலின் ஆர்வத்தால் டெஸ்டிமோனு அவனைத் தழுவிக்கொள்ள அவன் விரைந்து மூச்சுவிடும்படியும்—(காதலோடு கட்டியணைப்பவர் விரைந்து விரைந்து மூச்சுவிடும் ஆர்வத்தை இது உணர்த்துகின்றது).

அணைந்திருக்கும்...... அனல்தந்து = ஒத்தெல்லோ தீதின்றி வந்து சேரவேண்டுமே என்ற கவலையால் தளர்ந்திருக்கின்ற நாங்கள் மீண்டும் உற்சாக மடையும் படியும்.



சான்ற மூச்சினுலேயே வீங்கும்படி செய்வாயாக ![5]

[டெஸ்டிமோனு, எமிலியா, இயாகோ, ராடரிகோ, சில ஏவலாளர்களுடன் வருகின்றனர்]

காஸ்ஸி:—ஹா, பாருங்கள்: கப்பலின் செல்வம் கரைக்கு வந்துளது [6]! ஸைப்ரஸ்தீவினர்காள்,உங்கள் முழந்தாள்களை அவள் அடைந்தவளாகட்டும் [7]. வாழ்க நீ, வருக வனிதாய்! வானவர் அருள் நின்னை முன்னும் பின்னும் எப்புறத்தும் வளைந்து சூழ்ந்து கொள்வதாகுக! [8]

டெஸ்டிமோனு:—வந்தனம் உனக்கு, வீர காஸ்ஸியோ. என் தலைவரைப்பற்றி நீ யெனக்கு என்ன செய்தி சொல்லவல்லாய் ?

காஸ்:—அவர் இன்னும்வந்து சேர்ந்திலர்; நலமேயுளர்,விரைவிலிங்கு இருப்பவருமாவார் என்பதன்றி வேறு யாதும் யானறியேன்.

டெஸ்டி:—ஹா, மற்று, யான் அஞ்சுகின்றேன்—உடன்வருகையை எங்ஙனம் இழந்தனை ? [9]

காஸ்:—கடலின் வானத்தின் பெரும் போராட்டம் எமது தொடர்பினைப் பிரித்தது[10]. மற்று, கேள்! ஓர் இதை[11].

[உள்ளே] ஓர் இதை, ஓர் இதை !

[பீரங்கி வெடிக்கும் ஒலி கேட்கின்றது]

இரண்டாம் - நகரப்பெருமகன்:— கொத்தளத்திற்குத் தம் வந்தனத்தைச் செலுத்துகின்றனர். இதுவும் அப்படியே ஓர் நண்பன்.[12]

காஸ்:—செய்தியின் பொருட்டு, பார்.[13]

[பெருமகன் போகின்றுன்]

காஸ்:— நல்ல பதாகையாள, வருக — (எமிலியாவைப் பார்த்து) வருக, மாதராய்[14]. நல்ல இயாகோ, என் மரியாதையை நான் நீட்டுகின்றஇது நின்பொறுமையைக் கைக்கச்செய்யவேண்டா; வினயத்தின் இத்துணிவுடைத் தோற்றத்தை எனக்குத் தந்திருப்பது எனது வளர்ப்புமுறையின் ஒழுக்கமாம். [15]

[எமிலியாவை முத்தமிடுகின்றுன்]

இயாகோ:—ஐய, தன் நாவினின்று அவளெனக்கு அளிக்கின்ற அவ்வளவு தன் உதடுகளினின்று முனக்

ஸைப்ரஸ்......கொணர = அவன்வந்துசேர்ந்து ஸைப்ரஸில் உள்ளவர்களுடைய கவலைகள் நீங்கும்படியும்.

ஒத்தெல்லோவை......செய்வாயாக = ஒத்தெல்லோவின் கப்பல் இக்கடுங்காற்றினுல் உடையாமற் காத்து, அவன் விரைவாக வந்து சேரும் வண்ணம், உன்னுடைய மூச்சையே அவனது கப்பலைச் செலுத்துவதற்கு வேண்டிய காற்று ஆகும்படி உதவுவாயாக. (இதை = கப்பலின் பாய்)

(6) கப்பலின் செல்வம்—இங்கு டெஸ்டிமோனுவைக் குறிக்கின்றது.

(7) முழந்தாள் படியிட்டு அவளுக்கு உங்கள் வணக்கத்தைச் செலுத்துங்கள்—என்பது பொருள்.

(8) தெய்வங்கள் தம் அருளினுல் உன்னைச் சூழ்ந்து நின்று எல்லா வகைகளிலும் உன்னைக்காக்கட்டும்—என்பது பொருள்.

(9) அவருக்கு யாது நேருமோவென்று அஞ்சுகிறேன். அவருடன் வந்த நீ அவரை எங்ஙனம்விட்டுப் பிரியநேர்ந்தாய்—என்பது பொருள்.

(10) கடலிற்கும் வானத்திற்கும் இடையே நிகழ்ந்த பெரும்போர்போன்ற கடுங் காற்றுனது, நாங்கள் தனித்தனிவந்த இரண்டு கப்பல்களையும் வேறு வேருக அகற்றிப் பிரித்துவிட்டது — என்பது பொருள்.

(11) இதை = காற்றுக்கப்பலில் கட்டியிருக்கும் பாய்; இங்கு ஆகுபெயராகிக் கப்பலையே குறிக்கின்றது.

(12) கப்பலில் வருகின்றவர் இங்குள்ள கொத்தளத்திற்குத் தம் வந்தனத்தைச் செலுத்தும்அடையாளமாகப் பீரங்கி வெடிக்கின்றுர்களாகையால் முன்னே வந்த கப்பலில் இருந்தவர்போல் இக்கப்பலில் வருகின்றவர்களும் நமது நண்பர்களாக இருக்கவேண்டுமே யொழிய, நம் பகைவர்களாய துருக்கர்களின் கப்பலாக இது இருத்தல் இயலாது—என்பது பொருள்.

(13) யார்வந்திருக்கிறுர் என்ற செய்தியைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு நீ போய்ப் பார்த்து வா —என்னக் காஸ்ஸியோ இரண்டாம் நகரப் பெருமகனை ஏவுகிறுன்.

(14) இயாகோவிற்கும் அவன் மனைவி எமிலியாவிற்கும் காஸ்ஸியோ நல்வரவு கூறுகின்றுன்.

(15) ஷேக்ஸ்ப்பியர் காலத்தில், நற்குடிபிறந்த ஒழுக்கமுடையவர், மாதருக்குத்தம் வினயத்தைச் செலுத்தும் அடையாளமாக அவர்களை முத்தமிடுதல் மேனுட்டுவழக்கமாயிருந்தது. அதன்படி காஸ்ஸியோ எமிலியாவை முத்தமிடுகிறுன். முத்தமிடச் சென்றபோது, இயாகோவினிடம் விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகள் இவை.

உன்கண்முன் நான் உன்மனைவியை முத்தமிடுகின்றேனென்று நீ மனம்கசந்து பொறுமையிழக்காதே, நான் பிறந்து வளர்ந்த என்ஒழுக்கத்திற்கு இணங்கியே இப்படி எனது வினயத்தைக் காட்டத் துணிகின்றேன்—என்பது பொருள்.

என் மரியாதையை நான் நீட்டுகின்ற இது = நல்வரவு கூறுவதோடு நிற்காமல் பின்னும் அம்மரியாதையை வளர்த்து முத்தம் இடுவதாகிய இது. நின் பொறுமையைக் கைக்கச் செய்யவேண்டா = நீ கண்டு சகிக்கமாட்டாமல் மனம்கசந்து புழுங்கவேண்டா.

வினயத்தின் துணிவுடைய இத்தோற்றம் = நான் என் வினயத்தைச் செலுத்தும் இவ்வகையில் அதிகம் துணிவு விஞ்சியவனுகத் தோன்றுவது.

இத்தோற்றத்தை எனக்குத் தந்திருப்பது எனது வளர்ப்புமுறையின் ஒழுக்கமாம் = நான் வளர்ந்த ஒழுக்கத்தின் மரபின்படி நான் இங்ஙனம் செய்யவேண்டியிருக்கின்றதே யன்றி வேறு அன்று (மாதரை முத்தமிடவேண்டுமென்னும் ஆசையால் நான் இப்படிச்செய்கிறேனென்று எண்ணுதே)

குறிப்பு:—ஆயினும் அம் மரபுமுறையின்படி டெஸ்டிமோனுவை இவன் முத்தமிடத் துணியாமைகருதத்தக்கது.

(16) இவள் என்னிடத்தில் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பாள் ; அது கேட்டுக் கேட்டு நான் சலிப்படைந்து கிடக்கின்றேன். அவள் எனக்குத் தன் நாவைத் தந்தவிதம் இது. இப்பொழுது நீமுத்தமிடும்படி தன் உதடுகளை உனக்குக் கொடுக்கிறுள். எனக்கு அவள் தன் நாவைத் தருவது போல் அவள் தன் உதடுகளையும் உனக்கு அடிக்கடி தருவாளாயின்,நீயும் முத்தமிட்டு முத்தமிட்டுப்"போதும் போதும்" என்று சலித்துவிடும்படி நேர்ந்துவிடும்—என்பது பொருள்.

குக் கொடுப்பாளாயின், போதியது நீ பெற்றபடி யாவாய்.[16]

டேஸ்:—ஐயோ, இவளுக்குப் பேச்சே இல்லையே.

இயா:-உண்மையில், அளவு கடந்து[17]: நான் நித்திரைபோவதற்கு இச்சையுடையவனா யிருக்கும்போது, அதனைச் சும்மா காண்கின்றேன்[18]. பெருமாட்டியின் முன்னிலையிலோ இவள் தன் நாவினைச் சிறிது தன் இதயத்துள் வைத்து, எண்ணத்தாலே வைகின்றாளென்பதை ஒவ்வுகின்றேன்.[19]

எமிலியா:—இப்படிச் சொல்ல உனக்கிருக்குங் காரணம் மிகச் சிறியதே.[20]

(17) அளவு கடந்த பேச்சு இவளுக்கு இருக்கின்றது- என்று சேர்த்து முடித்துக்கொள்ளக.

(18) இவ்வாசகம்,—'நான் நித்திரைக்குச் செல்லும் போதுதான் இவள் பேசுவதை ஒய்ந்திருக்கின்றாள்' என்றும்,' "நான் நித்திரை செய்ய விரும்பும்போது ஓயாமல் பேசிக்கொண்டிருப்பாள்" என்றும், முதுனூலிற்போலவே, இரண்டுவிதமாகவும் பொருள்படக் கூடும்.

அதனைச் சும்மா காண்கிறேன் = அவள் நாக்கு ஒய்ந்திருக்கக் காண்கிறேன்; அல்லது அவள் நாக்கை ஓயாமல் காண்கிறேன். 'சும்மா' என்னுஞ் சொல்லுக்கு இவ்விரு பொருளும் தமிழ்வழக்கில்இருப்பதை, 'சும்மா பேசுகிறான்'—'சும்மா இருக்கிறான்' என்பன போன்ற வாக்கியங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

(19) பெருமாட்டியாகிய உனக்கு எதிரில் அவள் வாயாடாமல் இருக்கலாம். ஆயினும் வையவேண்டியதை யெல்லாம் ஓயாமல் தன் மனதிற்குள்ளேயே வைதுகொண்டிருப்பாள்—என்பது பொருள்.

(20) என்னை நீ வசவி என்று சொல்வதற்குக் காரணம் இல்லையே—என்பது பொருள்.

---

# கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினள்

[202-வது பக்கத் தொடர்ச்சி]

அகலிகையின் கற்பு:-தேவேந்திரன் அத்துணை அதிகமாகக் காதலித்திருந்த அகலிகை தனக்குவாய்க்காது போகவே அதுவே நினைவாக மறைந்தேனும் அவளது போகத்தைத் துய்க்கப் பலவாண்டுகள் எதிர்பார்த்திருந்து, காமப்பிணி வருத்த உழன்றான். ஒருநாள் கௌதமர் இல்லாத சமயம்பார்த்துக் கௌதமரே போன்ற உருக்கொண்டு அன்னார் சூழலில் நுழைந்து அகலிகையோடு போகம் துய்த்துப் போகும்தருணத்தில் மகரிஷி வந்தார். நடந்த உண்மை தன் மெய்யுணர்வால் தெரிந்துகொண்டார். இந்திரன்மீது சினந்து, நினக்கு ஆயிரமாதர்க்குள்ள அறிகுறி யுண்டாக,' என்று சாபம் தந்தார். அகலிகையைக் கல்லாய்க் கிடக்கும்படி சபித்தார். இந்திரன் கௌதமர் சூழல் வந்ததுமுதல் சாபம் அடைந்ததீறாக வான்மீகர் கம்பருக்கு முற்றும் மாறுகின்றார். ஆயினும் முன்னவர் வான்மீகர்; வான்மீகரைக் கொண்டுதான் கம்பர் இவைகள் அறிந்தார். கம்பர், பிறர்நெஞ்சு புகாப் பத்தினிப்பெண்டிர் மல்கிப் பரந்த தமிழ்நாட்டிற் பிறந்தவர். ஆதலால் கம்பருடைய அகலிகை கற்பிற் சிறந்தவளாகின்றாள். இப்படியே வான்மீகர் கைப்பட்ட தாரைக்கும் கம்பர் கைப்பட்ட தாரைக்கு மிக்க வேற்றுமை காணப்படுகின்றது. கம்பர்கண்கொண்டு அகலிகையின் கற்பை நாம் சிறிது இங்கு நோக்குவோம்.

ஸ்ரீராம லக்ஷ்மணர்களை மிதிலைநோக்கி விசுவாமித்திரர் அழைத்துச் செல்லும்போது வெள்ளிடையிற் கிடந்த கருங்கல்லில் ஸ்ரீராமபிரானுடைய திருவடி நீறுபட்ட மாத்திரத்தால் முன்னர்க் கௌதமரால் 'கல்லிய லாதி' என்னச் சபிக்கப்பட்டு அச்சொற்படி கல்லுருவாய்க் கிடந்த அகலிகை பண்டை வண்ணத்தளாகி எழுந்து மின்னென ஒதுங்கிநிற்க அன்னாள் இன்னார் மனைவி யென்று விசுவாமித்திரர் சொன்னதும் ஆச்சரியமடைந்த சக்கரவர்த்தி திருக்குமாரன் 'முன்னையூழ் வலியினாலோ நடுவொன்று முடிந்தது உண்டோ அன்னையே அனையாட் கிவ்வாறு அடுத்தவாறு அருளுக"? என்று வினவ, விசுவாமித்திரர்,

"தையலாள் நயன வேலும் மன்மதன் சரமும் பாய
உய்யலா மென்று நாடி யுழல்பவ னொருநா ளுற்ற
மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றம் செய்து
பொய்யிலா உள்ளத்தான்றன்உருவமேகொண்டுபுக்கான்"

என்று கூறுகின்றார். "உய்யலாமென்று நாடி யுழல்பவ னொருநாளுற்ற மையலாலறிவுநீங்கி" என்பதால், இந்திரன் பலவாண்டுகள் அகலிகையின்மீது மையல் கொண்டுகிடந்தான் என்பதும், அங்ஙனங் கிடந்தவனுக்கொருநாள் ஒரு சமயத்தில்தான் புகுந்தருணம் கிடைத்தது என்பதும்ஏற்படுகிறது. இதனாலகலிகையும் கௌதமரும் உயிரும்உடலும்போன்றுஇறைப்போதும் பிரியாது அன்போடு வாழ்க்கை செய்தார்களென்பது விளங்கும். இதற்கு ஏற்பவே கம்பர்கருத்தை அடியொற்றிப்பாடிய அருணாசலகவிராயர் ராம நாடகத்தில் துவக்கும்பொழுதேபல்லவியில்"தேவியிவள் ராமா கௌதமர்ஆவியிவள்ராமா" என்கிறார். ஆவியாயிருக்கிற இவளை விட்டுஅன்று மகரிஷி பிரிந்தது மிந்திரன் செய்ததொருசூழ்ச்சியாமென்று குறிப்பிடவே 'மாமுனிக் கற்றம் செய்து' என்கிறார். இவ்வாறு இந்திரன் மகரிஷியைப் பிரிக்கவைத்து உண்மையுருவோடு சென்றிருந்தால் அகலிகையினாலேயே சாபம் பெற்றிருப்பான்என்பதை யுணர்ந்தவே"பொய்யிலா உள்ளத்தான்றன் உருவமே கொண்டு புக்கான்" என்கின்றார். கௌதமர்உருவத்திற்கும் இவன்கொண்ட போலி உருவத்திற்கும் சிறிதும் மாற்றமில்லை யென்பதை விளக்க 'உருவமே' என்னத் தேற்றேகாரம் கொடுத்துச் சொல்லுகிறார். இங்ஙனமிருக்க இப்பாட்டின் முதலடியில் "தையலாள் நயனவேலும் மன்மத சரமும்பாய" என்பதால் தையலாள் நயனவேல் பாய்ந்ததின் குறிப்பினால் இந்திரன் சென்றிருத்தல் கூடும் என்று சிலர் அபிப்ராயப்படுகின்றார்கள். அது மிகவும் பிழை. கம்பருடைய அகலிகை அன்னவாறு இழிந்த நோக்கோடு பார்ப்பவளோ அல்லள். அவள் நோகுப் பொதுநோக்காகவே யிருக்கும். தையலார் நோக்கு இருவகை யுண்டு: ஒன்று பொது நோக்கு,



ஒன்று சிறப்பு நோக்கு. பொதுநோக்குக் குறிப்பிடாமல் எதையும் பார்க்கின்ற பார்வை. சிறப்பு நோக்குக் குறித்து ஒன்றைப் பார்க்கின்ற பார்வை. காதலன் காதலித்த காதலுக்கு உரிய பெண்பால் பொது நோக்குடையளா யிருந்தால், காதலி தன்னைச் சிறப்பாகக்காணவில்லையே என்று காதலன் மிகவும் மனம் நோவான். அப் பொதுநோக்குச் சிறப்பாகத் தன்னை நோக்குமாயின் அந்நோய்க்கு மருந்து அதுவேயாக முடியும். இதனை வள்ளுவர்,

"இருநோக் கிவளுண்க ணுள்ளதொரு நோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து."

என்று தெரிவிக்கின்றார். இதனால் அவள் நோக்கும் நோக்கு பொதுநோக்காதலால் உய்ய எண்ணுகின்ற இவன் உழல்கின்றான். அவள் இவனைச் சிறப்பாக நோக்கவில்லை என்பதைக் குறிக்கவே 'உழல்பவன்' என்றும், கண்ணுக்கு 'வேல்' எனும் உவமையும் கூறி வைத்தார். கண்ணுக்கு உரிய உவமைப் பொருள்கள் கெண்டைமீன் தாமரை நீலோத்பலம் நவ்வி இவையெல்லாம் இருக்க 'வேலை' உவமை கூறியது 'உழல்பவன்' என்று கூறியதற்கு ஏற்ற நயமுடையசொல்லாகும். அன்றியும் 'தையலாள் நயனவேல் மன்மதன் சரம்' என்று ஆயுதவரிசையிலே சேர்த்துச் சொன்னதாகும். அகலிகையை விட்டு அக் கௌதமன் பிரியாமையினால் இந்திரன் உழன்றானே யன்றி வேறன்று; என்றால், சிறப்பு நோக்கு பெற்றவன் கலவிபெற்றவனேபோல மகிழ்வான்; அவ்வாறு, இவன் மகிழாததோடு அம்மாமுனி அகன்றகாலத்தில் "பொய்யிலா உள்ளத்தான்றன் உருவமே கொண்டு புக" வேண்டியதில்லை. தையலாள் நோக்கை இவன் பெற்றிருப்பானாயின் இவன் தன் உண்மையுருவோடு சென்றிருக்கலாம்; அவ்வாறு செய்யாமையினாலே அவள்நோக்கு இவன் பெற்றிலன் என்பது திண்ணம். தையலாள் ஓர் ஆடவன்மீது நோக்குடையளாயிருந்தால் அவன் அவளைச் சந்திப்பதற்குப் பலகாலம் உழலவேண்டியதில்லை. அவளது புருஷன் பிரிவை அக்கள்ளக் காதலன் கவனிக்க வேண்டியதுமில்லை. கற்பிழக்க எண்ணிய காதலியைக் கணவன் தடுத்தற்கு இயலுமோ? இதனாலன்றோ திருவள்ளுவர்,

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

என்றார். தவிரவும், தையலாள் நயனவேல் இந்திரன் மீது பாய்ந்திருக்குமானால், அகலிகை வரலாற்றின் தோற்றுவாயிலேயே கம்பர் "பண்டை வண்ணமாய் நின்றனள்" என்று அவள்கல்லுருநீங்கிநின்றநிலையைச் சொல்லுவாரா? கல்லுருப் பெறுதற்குமுன் னிருந்த வண்ணம் இந்திரன்மீது நோக்குடைய வண்ணமாயிருந்தால் அது கற்பிழந்த வண்ணமாகும். கல்லுரு நீங்கப்பெற்ற வண்ணத்தினது சிறப்பைத் தெரிவிப்பதற்கே 'பண்டைவண்ணமாய்' என்று முன்னிருந்த வண்ணத்தை உவமை காட்டுகின்றார். ஆதலால் முன்னிருந்த வண்ணம் கற்பிற்சிறந்த ஒரு வண்ணம். கல்லுரு நீங்கப்பெற்ற இவ்வண்ணமும் கற்பிற்சிறந்த வண்ணமாம் என்று பொருளாகும். கம்பரைப்போல விசுவாமித்திரரும் அகலிகையைப்பற்றிக் கௌதமரிடம் சொல்லும்போது 'நெஞ்சினாற் பிழைப்பிலாள் ......முன்னை வண்ணத்தளாகி நின்றாள்' என்னவே கூறுகின்றார். இதனால் முன்னை, பின்னை, இடை இம் முக்காலத்தும் அகலிகை குற்றமில்லாக் கற்பரசியே என்று விளங்க வைக்கின்றார். இவ்வாறு சொல்லும் விசுவாமித்திரர்தான் முன் 'தையலாள் நயனவேல்' என்றுஞ் சொல்லுகிறார். ஆதலால் தையலாள் நயனவேல் இந்திரன்மீது பாய்ந்தது என்று பொருள் கொண்டால் கம்பர் கருத்துக்கு முரணுவதோடு இதனைச் சொல்லும் விசுவாமித்திரர் கருத்துக்கும்முரணுகின்றது. ஆதலின் எவ்வகையிலும் அப்பொருள் பொருந்தாதென்று தவிர்க. அகலிகையின் பொது நோக்கால் இந்திரன் பலகாலம் உழன்றுகொண்டிருந்தான் என்பதனாலும் ஒருகால் நேரச்செய்த அந்நேரத்தும் கௌதமன் உருவமேகொண்டு சென்றதனாலும் அகலிகையின் கலங்காத கற்பின் திண்மை மலையிலக்காய் விளங்குகின்றது.

பொய்யிலாஉள்ளத்தான்றன் உருவமே கொண்ட இந்திரன்,வெளிச்சென்றிருந்த கௌதமரே திரும்பி வந்தார் என்று தோன்றும்படி புகுந்தான் என்பது விளங்கக் கம்பர் "மாமுனி அற்றம் நோக்கிப் பொய்யிலாஉள்ளத்தான்றன் உருவமேகொண்டு புக்கான்" என்று கூறியிருக்கின்றார். இதனால் கௌதமர் வெளியே சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் இந்திரன் கௌதமர் உருவமேகொண்டு புகுந்ததும், வெளியே சென்ற மகரிஷி எதற்காகவோ திரும்பிவந்தார் என அகலிகை நினைப்பதன்றி அவள் சற்றேனும் சந்தேகிக்கிக்காதவாறு இருந்ததென்று நன்கு விளங்குகின்றது. இந்திரன் அகாலத்தில் கோழியாகக் கத்தவே கௌதமர் விடியற்காலமென்று நீராடச் சென்றவர் அங்கு நீரசையாதிருக்கக் கண்டு ஐயங்கொண்டு நீராடாது திரும்பினார் என்னச் சிலர்சொல்லுகிறார்கள். வான்மீகியும் இங்ஙனம் கூறுவர் போலும். இவ்வாறு சொல்லி அகலிகைக்குக் குற்றத்தைஏற்றிவைக்கக் கம்பர் நினைத்தாரல்லர். இன்னணமாயின் கௌதமர் அறிவீனர் என்று விளங்கும். நீராடச் சென்றவர் இவ்வளவு விரைவில் வர இயலாது. வந்தாலும் ஈர வாடைகளுடன் வந்திருப்பர்.வைகறை நேரமென்று நீராடச் சென்றவர் விரைவில் திரும்பியதன் காரணமாதல் நீராடாது திரும்பியதன் காரணமாதல் ஏதேனும் வினவி யிருப்பாள். ஜபதபங்கள் முதலான சத்கிரியைகள் செய்யும் அக் காலை நேரத்தில் போகத்துக்கு முயல்வதாலேயும்ஐயப்பட்டிருப்பாள். ஆதலால் வந்தவன் வேறொருவ னென்றறிந்தே போகம் நுகர்ந்தாள் என்ற குற்றந்தோன்றுதவாறு கம்பர் அகலிகையைக்....."மேனாட் செறிசுடர்க்குலிசத்தண்ணல் அவ்விய மவித்த சிந்தை முனிவனை வற்ற நோக்கி - நவ்விபோல் விழியினாள்தன் வனமுலை நணுகலுற்றான்" என்றவர் "...மாமுனிக்கற்றம்செய்து பொய்யிலா உள்ளத்தான்றன் உருவமேகொண்டுபுக்கான்" என்று காத்துக் கொள்ளுகின்றார். மேலும் கௌதமர் வெளியே சென்றதும் இந்திரன் கௌதமரைப் போல் உள்ளேபுகுந்ததும் போகத்துக்குரிய காலமாகவே இருந்தது என்பதையுங் குறிப்பாகக் கம்பர் காட்டிவிடுகின்றார்.

பின்னர்ப் போலி கௌதமன் அகலிகைபால் அநுபவித்த விடயங்களைக் கம்பர் ஓர் பாட்டில் சொல்லுகிறார். அப்பாட்டால் அகலிகை கற்பிழந்தாள் என்று சிலர் பொருள் சொல்லுகிறார்கள். அகலிகைச் சரித்திரத்தைக் கூறும் பதினாறு பாக்களையும் முன்னும் பின்னும் பொருத்திப் பொருள் கொள்வதாயின் நம் தமிழ்நாட்டுப் பத்தினிப் பெண்கள் தம் வரிசையில் அகலிகையைச் சேர்த்துச் சொல்லலாம். அவ்வாறு சேர்த்துச்சொல்லவே கம்பர் பேராவல் கொண்டார். நமது கவிச்சக்ரவர்த்தியின் கருத்தின்படி அவ்வாறு கொள்ளுதலே நம் கடமையாகும். நிற்க, கௌதமர் ஆச்ரமத்தில் இந்திரன் புகுந்தான்.

"புக்கவ ளோடுங் காமப் புதுநல மதுவின் றேறல் [ந்
ஒக்கவுண்டிருத்தலோடுமுணர்ந்தனளுணர்ந்தபின்னு
தக்கதன்றென்னத்தேராடாழ்ந்தனளிருப்பத்தாழா
முக்கணனனையவாற்றன்முனிவனுமுடுகவந்தான்."

அதாவது-இந்திரன் "புக்கு" என்பதினாலேயே அவன் புகுவதன் அருமையையும், புகுவதன் முயற்சியையும், புகத்தகாமையையும், புகுதற்கு வாய்த்த சந்தியையும் பிறவுமறிந்துகொள்ளலாம். 'அவளோடும்' என்பது கற்பும் பொற்பும் வாய்ந்த அவளோடு என்னப் பொருள்படும். "காமப்புதுநல மதுவின்றேறல் ஒக்கவுண்டிருத்தலோடு முணர்ந்தனள்" என்பதால்புகுந்தஇந்திரன் அகலிகையோடுபுதுநல மதுவின் தேறல் ஒக்கவுண்டான், போலி கௌதமனிடம் அகலிகை புதுநலமதுவின் தேறல் ஒக்கவுண்டாள், இந்திரன் பல்லாண்டுகளாக மையல் கொண்டு கிடைக்கப் பெறாது அரிதில் வருந்திப்பெற்ற அகலிகை போகம் அவனுக்குப் புதுநல மதுவின் தேறலாக விருந்தது, அகலிகைக்கோதேவபோகமாதலால்அதுபுதுநலமதுவின் தேறலாக இருந்தது. மனிதபோகத்தினும் சிறந்ததாம் அரசபோகம், அரசபோகத்தினும் சிறந்தது தேவபோகம், தேவபோகத்தினும் சிறந்தது இந்தர போகம்; இப்படிப் போகஇன்பங்கள் படிப்படியாக உயர்ந்துகொண்டேபோகின்றபடியால் மனிதபோகத்திலிருக்கின்ற அகலிகைக்கு மும்மடங்கு அதிகம் உள்ள இவ்விந்திரபோகத்தால் புதுநலமதுவின்தேறல் ஒக்கவுண்டிருந்தாள்! இப்போகத்தின் புதுமை இதுகாறுமில்லாத 'புதுநலமாக விருக்கின்றதே என்னே! என்று எண்ணுவதற்குமின்றி அப்போகத்தின் அளவுகடந்த தன்மையால் அந்நேரத்தில் மனமிழந்தாள். உலகஅநுபவமும்இது. பேரானந்தமும், பெருந்துன்பமும் அடைந்த காலத்து யாரும் ஒன்றும் நினைக்க இயல்வதில்லை. நமது கரணங்கள் அதன் அளவுக்கு மேற்பட்டதையும்கீழ்ப்பட்டதையும் அறிந்துகொள்ளுதற்கியலா. நம் கண்களுக்கு மிக நுட்பமானபொருள்கள்தெரிவதில்லை. நம் கண்களுக்குத்தெரியாதன சில ஜந்துக்களுக்குத்தெரிகின்றன. இருட்டில் இருக்கின்ற ஒருபொருள் நமக்குத்தெரிவதில்லையாயினும். அது பூனையின் கண்களுக்குத் தெரிகிறது. இரகசியமாகப் பேசுமொலி நமது காதுக்குக் கேட்பதில்லை. நுட்ப ஒலியும் பாம்பினது காதுக்குக் கேட்பதாய்ச் சொல்லுகிறார்கள். அதுபோலவே அதிக சத்தமும் நமது காதுகள் கிரகிப்பதில்லை. இரயில், ஏரோப்ளேன் அனையசத்தம் நமக்குச்செவிடுபடக் கேட்கின்றதல்லவா? இப்பூமியானது தன்னையும் சூரியனையும் சுற்றுவதால் ஏற்படும் சத்தம் எவ்வளவு இரைச்சலாக நமக்குக்கேட்கவேண்டும். அவ்வாறு ஒன்றும் கேட்கக்காணோம். ஏன்? நம்காதுகள் அதிக சத்தத்தைக் கேளா. நம் செவிப்புலன்கேட்பதற்கு மேற்பட்ட ஒலி நிச்சப்தமாயிருப்பது போலவேதான் தோன்றும். எக்கருவியும் அதன் இயல்புக்கு மேற்பட்ட அநுபவத்தை அறிந்துகொள்ள இயலாது. ஆதலால், இந்திரபோகம் அகலிகைக்கு மும்மடங்கு அதிகமானதால் அந்நேரத்தில் அவளுக்கு அது இன்பந் தந்திராது. இங்ஙனம் அநுபவிக்கும் குற்றத்தினின்றும் கம்பர் அகலிகையை ஒரு உவமைவாயிலாக மீட்டிக்கொள்ளுகிறார். அதுதான் 'மதுவின் தேறல்' என்பதாம். 'காமம்' புதுநல மதுவின் தேறலாக இருந்தது. கள் குடித்தவன் மதிமயங்குதல்இயல்பு. அம்மயக்கத்தில், கள்குடித்து இம்மயக்கத்தை மேற்கொண்டிருத்தல் தக்கதன்று என்று எண்ணவியலாது. ஆதலால் காமப் புதுநல மதுவின்தேறல் என்னலாகிறார். இப்படிக் காமப்புதுநலம் ஒக்க உண்டிருந்தவள் அதனின்று தெளிந்து ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் என்பதை உணர்ந்தனள். 'உணர்ந்த பின்னும் தக்கதன் றென்னத் தேருள்' என்கின்றார். இதற்கு இருபொருளுண்டு. ஒன்று:—இது தக்கது தகாதது என்று அறிந்துகொள்ளவில்லை யென்பது. ஏன்? மதிமயங்கி இருக்கின்றாளென்று முன் சொல்லிவைத்தோம் அதனாலே. மற்றொன்று:—இது தக்கதல்ல வென்பதையே தெரிந்துகொள்ளவில்லை. ஏனென்றால், மகரிஷி சகல சித்திகளுமுள்ளவர், அவர்பால் பல அதிசயங்களைப் பல காலங்களில் கண்டிருப்பாள், ஒவ்வொரு அதிசயத்தையும்காணும்போதெல்லாம் புதிதுபுதிதாகவே அதிசயம் எய்தினவளாயிருப்பாள். இன்று இப்போக விஷயத்தில் இவ்வதிசயத்தைக் காட்டினர் போலும் என்றுஅவள் எண்ணியிருக்கலாம். ஆதலினால் 'தக்கதன்றென்னத்தேருள்' என்கிறார். தக்கதன்று என்னத் தேருதவளாய்த் தாழ்தனள், விரும்பினள்-ஆழ்ந்தனள்; மேலும் அதிலேயே மூழ்கிவிட்டாள். இவ்வாறு இருக்கும் போதே "முக்கணன் அனைய வாற்றல் முனிவனு முடுகவந்தான்". இதுவரை கூறியவற்றால் அகலிகைபால் யாதொரு குற்றமும் இல்லை என்பது வெளிப்படை.


காலரா மருந்து
IDL விங்கபூர்
ஏமாற வேண்டாம்
நேரில் பெற்றுக்கொள்க
ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை. 0-4-0
கோரோஜனை .. 0-6-0
பாலசஞ்சீவினி 0-4-0
ப்ரலஸுதா டானிக் ரூ 1
40 நாட்கள் உபயோகப் பாக்கெட் அணா ஒன்று
நஞ்சன்கூடு பேல்போடி
ஜவரேக
ஐ.டி.எல். ச்யவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலா - நஞ்சன்கூடு
போலிகள் இருப்பதால் வீதிகளில் வாங்க வேண்டாம்




# சூரியன்

[204-வது பக்கத் தொடர்ச்சி]

## V. சூரிய குடும்பம்.

### 1. உள்நிலைக் கோளங்கள்.

இரவி சங்கரன் ஈசுரி திங்கள்செய்
இனிய கந்த னிசைதிரு மால்புதன்
குருவ யன்சுரர் கோன்வெள்ளி சுன்னெமன்
குலவி ராகு குறிபத்திர காளியா
மருவு சித்திர புத்திரர் கேதுவாம்
வான வர்முனி வோர்ராசி மற்றுநாள்
அரிமு தற்கிர சுத்தாற்ப ரசிவன்
அண்ட பிண்டம்ப டைத்தளித் தாற்றுமே.

—வீமேச்சுர உள்ளமுடையாள்.

சூரிய நாயனார் கோயில்:—

இன்ன வாறிங் கிவர்புரிய
எறிக்கும் இரவி உள்ளிருந்து
துன்னு மிருள்காற் சீய்த்தெழுந்து
சோதி யாகத் துலங்குவது:
முன்னம் புரங்கள் ஒருமூன்றும்
முழங்கும் அழல்வாய் மடுத்துண்ணப்
பொன்னங் கிரிகாற் குழைத்துவந்த
பொருளே யாகும் புகலுங்கால்.

—இலிங்க புராணம் 53 அத். 167.

சூரியனைப் பற்பல கோளங்கள் சுற்றிவருகின்றன. இவைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து சூரிய குடும்பம் (Solar System) என்னப் பெயர் பெறுகின்றன. சூரியனும், அவனைச் சுற்றிவருகின்ற கிரகங்களும் சுழன்று வீற்றிருக்கும், இக் கதிர்வட்டமாம் சூரிய குடும்ப வீட்டின் அமைப்பானது ஒவ்வொரு சாதியார் ஒவ்வொரு பிராகாரத்திலிருந்து வழிபடுமாறு, பல மதில்களோடும் பல மண்டபங்களோடும் விளங்கும்படி சாதிக்கட்டுப்பாடுடையர்கள் கட்டியகோயில் ஒன்றை, நமக்குநினைப்பூட்டுகின்றது. திருக்கோயிலில் மூலஸ்தானத்திலே, சுழன்றெரிந்தோங்கும் ஜ்வாலா நாசிம்மமூர்த்தி நமக்குக்காட்சிகொடுத்துஅருள்வதே போல, இந்தச் சூரிய குடும்ப வீடாம் திருக்கோயிலினுள்ளும், நடுவிடத்தே, சூரியமூர்த்தியும் சுழன்று எரிந்து காட்சிதந்துஅருள்கின்றார். மணமானவர்கள் தன் அருகிலும்வரப்பெறுதஅம் மூர்த்தத்தைப் பிரமசாரிச் சிறுவன் ஒருவன், கர்ப்பக் கிரகமாம் முதற் பிராகாரத்தே இருந்து வழிபாடுசெய்து, வலம்வந்திடுவதேபோலத் தாரையின் மைந்தனான புதன் என்பவன், வாழ்க்கைத் துணையாம் உபகிரகங்கள் ஒன்றுமேயின்றிப் பிரமசாரியாய், உருவத்திற் சிறியவனாய், வேகத்திற் பெரியவனாய்ச் சூரியனைச் சுற்றிவருகின்றான். பார்ப்பனப் பெண்களும் புகுதலாகாத அர்த்த மண்டபமாம் இரண்டாம் பிராகாரத்தே, ஆணாய்ப் பிறந்த பார்ப்பனர் மட்டும், தூவெள்ளாடை பூண்டு, தூவெண்ணீறணிந்து, வெள்ளை வெளுக்குந் திருமேனியோடே தன்னந்தனியே வந்து, மறைமொழி கூறி வழிபட்டு வலம்வருதல்போல, சூரியனைச்சுற்றியுள்ள இரண்டாம் பிராகாரத்தே, அசுர குருவாகிய சுக்கிர பகவான், தூய்மையான வெண்ணிறப் பொலிவோடு. மனைவி எனக் கூறத்தக்க உபகிரகம் ஒன்றுமே இன்றிச் சுற்றி வருகின்றார். இளங்கோவடிகள் பார்ப்பன பூதத்தை,

"நித்திலப் பைம்பூண் நிலாத்திகழ் அவிரொளி
தண்கதி மதியத் தன்ன மேனியயன்."

—அழற்படு காதை.

எனப் புனைந்துரைத்தலின், வெள்ளியைப் பார்ப்பான் எனத் தடையில்லை. மூன்றும் பிராகாரத்தில், பார்ப்பனப் பெண்கள், தம் சிறுவர்களோடும், ஆண்டவனை வலம்வந்து வழிபடுவதே போலப் பூமாதேவியானவள், தன் காலைச் சுற்றிக்கொண்டு திரிகின்ற பார்ப்பனக் குழவியாம் வெண்ணிறச் சந்திரனோடே, மூன்றும் மதில் வட்டத்திற்குள், சூரியனைச்சுற்றி வலம் வருகின்றாள். நான்காம் மதில் வட்டத்திற் குள்ளே, அரசர் பெருமான், கோப்பெருந்தேவி அருகேயும், மெய்காப்பாளன் தொலைவிலுமாக உடன்வர, வலம் வருவானெனச் சூரியனைச்சுற்றியுள்ள நான்காம்பிராகாரத்திலும், போர்க்கோலங் கொண்டெழுந்து தீப்பொறி பறக்கக் கண்சிவந் தொளிரும் செவ்வாயாம் அங்காரகன், நடுவே நின்று, சூரியனைச் சுற்றி வலம் வருகின்றான். இணைபிரியாத மனைவியாம் உபகிரகம் ஒன்று அணித்தாய் நின்று அவனைச் சுற்றி வழிபடுகிறது; மெய்காப்பாளனும் மற்றோர் உபகிரகம் தொலைவிலிருந்து அதனைச் சுற்றி வந்து, யாரும் அரசனருகே அண்டாதபடி தடுத்துநின்று சுழன்று வழிபடுகிறது. அரசபூதத்தை இளங்கோவடிகள்,

பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்

எனப் பாடுதலின், செக்கச் சிவந்து செவ்வாய் எனப் பெயர் பெற்ற அங்காரகனை, அரசனுக்குதலில் அருமையில்லை. ஐந்தாம் பிராகாரத்தே, அரசர்க்கும் அந்தணருக்கும் பிறந்த அநுலோமப் பிரதிலோமர்கள் ஒருங்குகூடி, ஒருநிலையின்றியே வலம்வந்து வழிபடுவதே போல, சூரியனைச் சுற்றியுள்ள ஐந்தாம் மதில் வட்டத்தினுள்ளேயும், நிலைபிறழ் கோள்கள்எனும் அஸ்திரகிரகங்களாம் கணக்கற்ற அடியார் திரளினர், பலவாறு கூடிப் பிரதக்ஷணம் செய்கின்றார்கள். பல ஜாதியாரும், பல சமயத்தாரும், தத்தம் பேதங்களை அறவே ஒழித்துவிட்டு, தமக்குள், பெரியார், சிறியவர், எளியார், வலியவர் என்ற ஒரு வேற்றுமையும் இல்லாமல், சமுதாயவாழ்க்கையில் ஈடுபட்டு ஒத்துழைத்துப் பொதுவேநின்று, தத்தம்தொழில்களைச் செய்துவருவாரைப்போலவே, கதிரவனை வலம்வருகின்ற இத்தொண்டர் குழாங்கள், தத்தம் கருமத்தினிடத்தே கண்ணாய், வேறு பிறரை நோக்கில்லாமல், இந்தப் பிராகாரத்தில் வெகுவேகமாய்ச் சூரியனைச் சுற்றி வருகின்றன. இதற்கடுத்த ஆறும் மதில் வட்டத்திற்குள்ளே, வணிகர் தலைவன், நம் இளங்கோவடிகள் கூறுவதுபோன்று, செந்நிறப் பசும்பொன் மேனியனாய், தன் மனைவி மக்கள் முதலான உடனி

லைச் சுற்றத்தாரோடு, இறைவனை வலம்வருவதுபோலச் சூரியகுடும்பவீட்டின் ஆறும் பிராகாரத்தில், மாற்றறியாத செழும்பசும் பொன்னின் வண்ணத்தோடே, தேவகுருவாகிய வியாழனும் பொன்னன் தன் உறுதிச் சுற்றமாம் ஒன்பது உபகிரகங்களும் தன்னைச் சுற்றிவந்து தனக்குப் பணிவிடை செய்யச் சூரியனைச் சுற்றி வலம்வந்து வழிபடலாகின்றான். ஏழாம் மதில் வட்டத்தினுள்ளே, உழவர் தலைவன், பண்ணையாட்கள் உடன்சூழ்ந்து வர, நம் இளங்கோவடிகள் கூறுவதுபோல்க் கருவிளை புரையும் மேனியனும், மண்ணுறு திருமணி புரையும் மேனியனும், விளங்கிக் கலப்பையே சக்கரமாகத் தன்னைச் சுற்றி வர, இறைவனை வலம்வந்து வழிபடுவதுபோலவே சூரிய நாயனார் கோயிலின் ஏழாம்பிராகாரத்தேக் கருநிறக் காரிப்பெருமாளாம் சனீச்சுரன், நம் கண்ணுக்கெட்டிய தன் பத்துப்பரிவாரங்களுடன், சூரியனைச்சுற்றி வரலாகின்றான். திருமாலின் சக்கரம் தாருகாசுரன் கழுத்திலே மாலையாகச் சுழன்று நின்றாற்போல, இவனைச்சுற்றிலும் வட்டத்திகிரி யொன்று, இடைவிடாமல் சுழன்றுகொண்டே வருகின்றது. துவாரகாபுரியைச் சுதரிசனமென்னும் சக்கரம், இடைவிடாமற் சுழன்று பாதுகாத்தாற்போல வோர் அறவாழி, இவ்வுழவன் காரியைப் பாதுகாக்கின்றதென்று, இவனை உற்றுநோக்கிக் கண்டோர், வியக்குமாறு, இவன் வடிவம் வெகு விநோதமாக விளங்குகிறது. திருவரங்கம் பெரிய கோயிலிலே போல, இந்தச் சூரிய நாயனார் கோயிலிலும், ஏழு பிராகாரங்கள், இன்னவாறு இருக்கக் காண்கின்றோம்.

கோயிற் சேரிகள்:—இவற்றிற்கப்பால் தீண்டாத் திருமேனியாரும், காணாத் திருமேனியாரும், கேட்கலாகாத குரலுடையாரும் வாழ்கின்ற மூன்று சேரிகளே, மூன்றுபிராகாரங்களாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். தீண்டாத் திருமேனியாரின் சேரி, எட்டாம் பிராகாரமாய் விளங்க, அதனிலே நந்தனார், தம் குடும்பத்தினர் நால்வரோடும், கோயிலை வலம் வருவதுபோல, சூரிய நாயனார் கோயிலிலும், நிருதி என்னும் இடுகுறிப் பெயருடைய யூரானஸ் (Uranus) என்பான், நான்கு உபகிரகங்களோடு, சூரியனைச் சுற்றி வருகின்றான். காணாத் திருமேனியாரின் சேரியாம் ஒன்பதாம் பிராகாரத்தில், நாயாடி ஒருவன், தன் மனைவியோடு ஆண்டவனை வெளிப்புறத்திலேசுற்றிவந்து வழிபடுதல்போல, வருணன்என்கிற இடுகுறிப் பெயருடையநெப்ட்யூன் (Neptune) என்பான், தன்னுடன் வரும் ஒற்றை உபகிரகத்தோடு, சேர்ந்து சூரியநாயனாரை, ஒன்பதாம் மதில் வட்டத்தில் வலம்வருகிறான். ஊர்க்கு வெளியே நின்று, ஊரினுள்ளார் தன் குரலையும் கேளாதபடி வாழ்ந்து வருகின்ற. * ஆததாயியாம் பரமசண்டாளன், கால்கோவ மதில்களுக்குள்ளே நடந்து செல்லாது, வெளியேயிருந்து, உள்ளே சென்றாற் செலவாகும் காசையும் செலவழிக்காது பாவத்தால் வந்த பணத்தை மிகுத்திப் புதைத்துவைத்துக் குபேர செல்வத்தோடும் தன்சேரியைச் சுற்றிவரும்போதே, கோயிலையும் சுற்றி [illegible] போல, சூரிய நாயனார் கோயிலின் [illegible] சுற்றில் குபேரன் [illegible]

* [illegible] சேர்ந்தவோர், [illegible]

(Pluto) என்பான், பிரதக்ஷணம் செய்துவருகின்றான். பத்து மதில்களோடும் பரந்து ஓங்கி விளங்கும் தனிப்பெருங் கோயிலொன்றில் பல பல குலத்தவர், பலப் பல நிலைகளிலிருந்தும், தேங்காய்களை உருட்டி எறிந்து, அவைதம்மைச் சுற்றிச்சுழன்றுவர, அங்கப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து உருண்டு ஆண்டவனைச் சுற்றி வலம்வருவதுபோல, இந்தச் சூரிய நாயனார் கோயிலிலும், கிரகங்கள் தத்தம் உபகிரகங்களினோடு சுழன்று சூரியனைச் சுற்றிவருகின்றன.

ஆகாய மதில்:—இச் சூரிய நாயனார் கோயிலுக்குப் பிராகாரமதில்களாக விளங்குகின்றவை, ஆகாயபூதம் (Space) ஒன்றாலேயே அமைந்தனவாகும். கல்லாலும்மண்ணாலும் கட்டிய மதில்களைப்போல் இவை, நமது கண்ணுக்குப் புலனாகமாட்டா. எனினும், தூர திருஷ்டிக்கண்ணாடி கொண்டு கணிதநூல் வல்லவர் ஆராயுங்காலையில், கல்லினும் பன்மடங்கு உறுதி பெற்று விளங்கி, நிலை பிறழாது நிலவி, அவ்வக்கிரகங்கள் சுற்றிவரும்அவ்வப் பிராகாரங்களின் எல்லையை அறுதியிட்டு வரையறுத்து ஓங்கி, ஒன்று ஒன்றிற் புகுந்து வரம்புபிறழாதபடி, காப்பதனைக் கண்டறிந்து வியப்படைகின்றனர்.

மூர்த்தியின் பெருமை:—இவ் வாதித்த மண்டலத்தின் நடுவே, அக்கினி லிங்கமாக விளங்கும் சூரியன், 866, 540 கல்லளவு உயரமும் அகலமும் பருமனும் (குறுக்களவு) கொண்டு, நெருப்புப் பந்தென நிலவி நிற்க, அதனைச் சுற்றிப் பற்பல கிரகங்கள், தத்தமக்கென்று விதிக்கப்பட்ட பாதைகளில், நெறி பிறழாமல், ஒழுங்காக, இடைவிடாது வட்டமிட்டுத் திரிகின்றன. நடுவேயுள்ள சூரியனை ஒரு தட்டிலும் சுற்றி வரும் மற்றைய கிரகங்களை ஒருதட்டிலுமாக நிறுக்க வேண்டுமாயின், இக்கிரகங்கள் எழுநூறு மடங்கு பெருத்தால்தான் இரண்டு தட்டும் சரியாகும். இக்கிரகங்கள் அத்தனையும் சேர்ந்து ஒரு எடையானால், சூரியன் 700 எடையாக விளங்குகிறான். இத்துணைப் பெரியவனாக இச் சூரியன் இருத்தலினாலே, தன்னைச் சுற்றியோடும் கிரகங்களின்மீது, வெளிச்சத்தையும், உஷ்ணத்தையும், இடைவிடாது பொழிந்து, அவற்றைத் தன் ஆட்சிக்குள் அடக்கிவைத்து, ஒழுங்காகத் தன் இராஜகாரியத்தை நடத்தும் சக்தியுடையவனாய் விளங்கிறான்.

பூமியே போல்வன:—இக்கிரகங்கள் யாவும், பல வகையிலும், நமது பூமியைப்போலவே விளங்குகின்றன. இவைகள் அனைத்தும், நம் பூவுலகைப்போலப் பெரும்பான்மையும் உருண்டை வடிவினவே. நமது பூமியைப்போல், இவைகளும், தம்மைத்தாமேசுற்றி வருகின்றபடியால், சூரியனுக் கெதிர்முகமாக நிற்கும் இடத்தே பகலும், புறமாக இருக்கும் இடத்தே இரவுமாக, மாறிமாறி வருதலின், இவ்வுலகிற்போல இக்கிரகங்களிலும், "நாள் என ஒன்றுபோற் காட்டி உயிரீரும் வாள்" உண்டு. இந்தக் கிரகங்களின் நாட்களை, நமது நாட்களோடு வைத்து ஒத்துப்பார்க்கையில், பூமியிலிருந்து சூரியனுக்கு அருகாகச் செல்லச் செல்ல, அக்கிரகங்களின் நாட்கள், நமது நாட்களைவிடச் சிறிது பெரிதாகிக்கொண்டே போவதனையும், பூமியிலிருந்து சூரியனுக்குத் தொலைவாகச் செல்லச் செல்ல, அக்கிரகங்களில் நாட்கள் பெரும் பான்மையும் சிறிது சிறிது குறுகிக்கொண்டே வருதலையும் காண்கின்றோம். ஈதன்றியும், இவற்றுள் பெரியன



[illegible]ாக விளங்கும் கிரகங்களில், நம்முலகிலே போல, [illegible]வராசிகள் உயிர்வாழ்வதற்கு ஏதுவான வாயுமண்டலம் (atmosphere) சுற்றிலும் கப்பிக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பல நிலைகள்:—ககோள சாஸ்திரிகள், இக்கிரகங்களை, மூன்று இனங்களாகப் பிரித்து ஆராய்ந்துவருகின்றனர். முதல் வகுப்பை, உள் நிலைக் கிரகங்கள் (Inner Plantes) என்று வழங்குகின்றனர். புதன் (Mercury), சுக்கிரன் அல்லது வெள்ளி (Venus) பூமி (Earth), அங்காரகன் அல்லது செவ்வாய் (Mars), என்ற இந்த நான்கு கிரகங்களும் இவ்வகுப்பைச் சேர்ந்தவை. இவற்றில் நமது பூமியே மிகப் பெரியதாகும். இவைகள் யாவும் சூரியனுக்கு அருகாமையிலே இருத்தலின், உள்நிலைக் கிரகங்கள் எனப் பெயர் பெறுகின்றன. பூமியைப் போலக் குளிர்ந்து கெட்டியாக இருத்தலின் நிலக் கோள்கள் (Terrestial Planets) என்ற பெயரும்பெறுகின்றன. இரண்டாவதுவகுப்பைச்சேர்ந்தவை இடைநிலைக்கோள்களாகும். ஆதித்த மண்டலமாம் சூரியநாயனார் கோயிலின் ஐந்தாம் பிராகாரத்திற்கண்டதொண்டர்குழாமே இவ்வினமாக விளங்குகிறது. 50,000 கிரகங்கள் கூட்டமாக இருக்கின்றன. மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவைவெளிநிலைக்கிரகங்கள் (Outer Planets) எனப் பெயர் பெறுகின்றன. வியாழன் (Jupiter), சனி (Saturn), நிருதி (Uranus), வருணன் (Neptune), குபேரன் (Pluto), என்பவை இவ்வினத்தைச்சேர்ந்தவை. இவை பூமியைக் காட்டிலும் எடையிலும் (Weight) அளவிலும் (Volume) மிகமிகப் பெரியனவாக விளங்குகின்றன. இவை, அதிக உஷ்ணமான நிலையில் இருப்பதால், பூமியைப் போல் கட்டியாக இல்லாமல், நீராயும் வாயுவாகவும் நெகிழ்ந்து உள்ளன. இவற்றை வானக்கோள்கள் (Celestial-Planets) எனவும், வான சாஸ்திரிகள் வழங்கி வருகின்றனர். சூரியனை விட்டுத் தொலையில் போகப் போக, இக்கிரகங்களில் ஒன்றினுக்கொன்றுள்ள தூரம் அதிகரித்துக்கொண்டே போகின்றது. இத்தகைய மிகப் பெரிய கோளமாம் சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களையும், அவற்றின் உபகிரகங்களையும், மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் நுணுகி ஆராய்ந்து கண்ட உண்மைகள், கட்டுக் கதைகளைவிட அதியற்புதமாக இருக்கக் காண்போம்.

---

# மலர்வனம்

## நன்றியோ நங்கா யிது!

தினைப்புனங் காப்பதொரு தலைக்கீடாகத் தானோர் நன்மகனுடன் களவொழுக்கம் நிகழ்த்துகின்றாளோர் மெல்லியல் மடவாள். இக்களவில் களிக்கின்ற காதலனும், வரைதல் வினவத் துணியானாகிக் காலம் பல கழிக்கின்றான். இங்ஙனே இறுதியில் வரைதல்இன்றியே கைநீத்துக் கழல்வானோவென இம்மகளும் அவள் நற்றோழியுங் கவல்கின்றனர். வரைதற்கு விரையானாயின் இனி இவளை யவன் களவினிற் கூடுதல் இயலாததாகிவிடும் என்பதை யவனுக்குச் சொல்லாதார்போற் சொல்லி யறிவுறுத்த நினைக்கின்ற தோழி, ஒரு நாள் தலைப்படுமிடத்தில் அவனை எதிர் பார்த்திருந்தபோது, அவன் போந்து சிறிது அயலே ஒதுங்கி நிற்றலும், அதனை யறிந்து, அவன் செவி சேருமாறு தன் தலைவிக்கு மிழற்றிய மொழிகளைச் சற்றே ஒற்றுடி மகிழ விழைவீராயின், நண்பர்கள், நற்றிணையின் நிழலில் மதுரை மருதனிளநாகனாரோடு கரந்து நிற்போம், சிறிது வம்மின்.—கூறுவாளந்தக் குறத்தி,

> அம்ம வாழி தோழி கைம்மா
> றியாதுசெய் வாங்கொ லோமே கயவாய்க்
> கன்றுடை மருங்கிற் பிடிபுணர்ந் தியலும்
> வலனுயர் மருப்பி னிலனீர்த் தடக்கை
> யண்ணல் யானைக் கன்றியுங் கன்மிசைத்
> தனிநிலை யிதணம் புலம்பப் போகி
> மந்தியு மறியா மரம்பயி லொருசிறைக்
> குன்ற வெற்பனொடு நாம்விளை யாட
> விரும்புகவர் கொண்ட வேனற்
> பெருங்குரல் கொள்ளாச் சிறுபசுங் கிளியே

[தோழீ நீ வாழ்க, நான் ஒன்று கூறுகின்றேன், கேள். புனத்தைக் காத்து நாம் அமர்ந்திருக்கும்படி மலைமேல் தனியாகக் கட்டப்பட்டு நிற்கிற பரணை நாம் விட்டுச் சென்று, குரங்குகளும் ஏறமாட்டாதபடி மரங்கள் அடர்ந்திருக்கின்ற ஓர் இடத்தை அடைந்து, அங்கு நாம், குன்றுகளையுடைய மலைநாடனாகிய தலைமகனுடன் விளையாடிக் கொண்டிருக்க, அப்பொழுது நம் தினைப்புனம் காவலற்றதாகி இருந்தபோதிலும், மிக விரும்பிக் கொள்ளற்குரிய தினைப்பயிரின் பெரிய கதிர்களைத் தின்று அழித்து விடாமல் சும்மாவிருந்து நமக்கு உபகாரஞ் செய்த, பெரிய வாயையுடைய கன்றினைத் தன் பக்கத்தில் உடைய பெண் யானையோடு சேர்ந்து திரிகின்ற வலிய தந்தத்தையும் தரையில் பட்டு இழுக்கின்ற துதிக்கையையும் உடைய ஆண் யானைக்கும், மற்று, (அவ்வாறே தினைக்கதிரைக்கொண்டுபோகாத) சிறிய பச்சைக் கிளிக்கும், நாம் என்ன கைம்மாறு செய்யக் கூடுமோ.]

காதலுக்கேதம் வரலாகாதென்று தன்வாயைக் கட்டிக்கொண்ட யானை வாழிய, வாழிய கிளியும். தினைப் புனஞ் சிதைந்ததாயின், பாணைவறிதுவிட்டுப் போயவிதம் யாதென அன்னை தான் ஆய்வாளாகித் தன் மகள் ஆடிய விளையாட்டின் வகையினைத் தெரிந்து கொண்டு, பின் அவளை இல்லின்கண் செறித்துவிட நேருமாதலின் இனி, குரங்கும் புகாத மரம்பயிற்சோலையில் ஆர்வமுடைய அன்பனோடு இம்மடமகள் புக்குப் புரியும் விளையாட்டனைத்தும்போம். கடிது வந்த காதலனும் நெடிதுயிர்த்து வந்தநெறி வினவாமல் தன் கால்கொண்டு கழிதலே கடன். இவ்விருவருக்கும் ஆற்றற்கரிய அவ்விடுக்கண் தம்மால் விளையாவண்ணம் அண்ணல் யானையும் அருஞ்சிறைக் கிள்ளையும், விரும்பற்குரிய பயிரின் நற்கதிர்களைக் கொள்ளாமற் சென்றனவென்னின், காதற்பரிவினில் அவைதாம் கட்டுண்டபெருமை அழகினில் அன்பினில்அருமையிற் சான்றதாகின்றது. காதலர்க்கு யாவரும் கேளிர். அக்கேண்மையின் நன்றியை மறவாமற் கைம்மாறு தேடும் இக்குறமகள் சூழ்ச்சியுந் திறமை சான்றதே.

கைம்மாறு இவள் தேடு மளவில், சிறைப்புறத்திருந்த அக்காதலன் தன்னுள்ளத்தைத் தேடுகின்றான். கைம்மாறு கிடைக்கவில்லையென்ற முனிவினால் அக்கிள்ளையும் களிறும் மற்றைநாள் அற்றம்நோக்கிப் புனத்துள் புகுந்துவிட்டனவாயின், தம் களவெலாம் பின் கைக்கிளையாகிவிடு மென்பதோர்ந்து வரைவுவேண்டி விரையானேல்அவ[illegible]கும்.

1992 12
m2.11, N28k.N
N35.8.14

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

முட்டையிடும் சேவல்:—லிங்கன்ஷைபரில், ஒஸ்டன் என்னும் இடத்தில் வசித்துவரும் இராம்பிஷ் என்பார் கோழிப்பண்ணை ஒன்று வைத்திருக்கிறார். இவ்விடம் ஏராளமான கோழிகளுண்டு. ஆனாலும், ஒரு கோழி மிக அதிக விசித்திரமான கோழியாக இருக்கிறது. இது பார்வைக்குச் சேவலைப் போல இருக்கின்றது. சேவலுக்குரிய இறக்கைகள், தலையில் கொண்டை முதலிய யாவும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. ஆனால், அது பெட்டைக் கோழியைப்போலவே முட்டை யிடுகின்றது. இதுதான் ஆச்சரியம்! ஓரிடத்தில் அதுமுட்டையிட்டிருப்பதைக் கண்டார். ஆனால் நம்பவில்லை. அது வேறுஒரு கோழி யிட்டிருக்கும் முட்டையாயிருக்கலாமென எண்ணினார். மறுநாள் சேவலைக் கவனித்தார். அதே இடத்தில் அது முட்டையிட்டிருந்தது. இன்னம் சில தினங்கள் கவனித்தார். தினந்தோறும் அந்தச் சேவல் ஒரு முட்டை யிட்டுக்கொண்டே வந்தது. இது அவருக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. அந்தச் சேவல் படிப்படியாய்ப் பெட்டைக் கோழியாய் மாறி வருகிறதென்று அப்புறம் தெரிந்துகொண்டார். சேவல் முட்டையிட்டபோதிலும், அதன் உருவத்தில் யாதொரு பேதமுமில்லை. சேவல் இடும் முட்டைக்கும், பெட்டைக்கோழி யிடும் முட்டைக்கும் ஒரு வித்தியாசமுமில்லை.

* * *

காற்று வீசும் மெத்தை:—அமெரிக்காவில் ஒரு சாத்திரி நூதனமான மெத்தைஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். சயனத்தில் படுத்திருப்போர் திரும்பிப் படுக்கும்போது உண்டாகும் அசைவினால் நித்திரைக்குப் பங்கம் வராதபடி திரும்பிப் படுக்கும் பக்கத்திலிருந்து மனோகரமான காற்று எழுந்து படுத்திருப்பவர்மீது வீசுமாம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷூயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தாரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப் பட்டிருக்கின்றதென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷூயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ராஞ்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங், 362. சைனாபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸோஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

126 வயது முஸ்லீம்:—நாகூர் சங்குவெட்டித் தெருவிலிருந்த ஷேக் இஸ்மால் என்ற 126 வயது முஸ்லீமைப் பற்றி ஒரு பத்திரிகையில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அவர் தம்மை ஆண்டவன் அழைப்பதாகச் சொல்லி சுமார் ஒருமாத காலம் அன்ன ஆகாரங்களின்றி யிருந்து காலஞ் சென்றார். அவர் உடல் நாகூர்த் தர்க்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அவர் இறுதி வரை, பேச்சு பார்வை ஒன்றும் குன்றாதிருந்தாராம்.

* * *

யானையின் துதிக்கை:—யானையின் துதிக்கையில் மற்ற எல்லாப் பிராணிகளின் உடல் முழுவதிலும் உள்ள தசைநார்களைக் காட்டிலும் அதிகமான தசைநார்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று ஆராய்ச்சிக்காரர் கணக்கிட்டிருக்கிறார்கள். மேற்படி துதிக்கையில் மட்டும் நாற்பதினாயிரம் தசைநார்கள் இருக்கின்றனவாம். துதிக்கையில் இவ்வளவு தசைநார்கள் ஏற்பட்டிருப்பதனாலேயே யானை தன்னுடைய துதிக்கையை எந்தத் திசையிலும் திருப்பக்கூடியதாக இருக்கின்றது.

**இண்டோ-கம்மர்ஷியல் பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

**S. N. N. சங்கரலிங்க அய்யர்;**
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)